உ





182/2001

# ஞானச்சுடர்

## தை மலர் 2001




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

சிவமயம்



# குறள் வழி

'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்
குறியெதிர்ப்பை நீர துடைத்து' [லாம்

பொருள் :

இல்லாத பேருக்கு ஈவதே ஈகையாகும்
பெயர் புகழ் கருதிச் செய்வது சுய
நலமாகும்.



# நற்சிந்தனை

## பெரியதிற் பெரியது ஆன்மா

பெரியதிற் பெரியது சிறியதிற் சிறியது
அரியதில் அரியது ஆன்மா அதுதான்
ஒன்றெனை இரண்டெனை ஓதவொண் ணாதது
நன்றெனத் தீதென நாடவொண் ணாதது
என்று மிருந்த படியே யிருப்பது
என்று மெம்மை விட்டுப் பிரியாதது
இன்பம் படைப்பது துன்பந் துடைப்பது
முன்னிலைச் சுட்டு முளையா திருப்பது
ஆவது மழிவதும் அற்ற மெய்ப்பொருள்
தேவரும் முனிவருந் தேடியுங் காண்கிலர்
அப்படி யுள்ளது அடியேன் மனத்திலும்
செப்படி வித்தை செய்து நிற்குமே.

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 37

2001 தை

15 FEB 2001

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஸ்ரீ முருக மந்திரம் | 1 - 5 |
| கடவுள் | 6 - 9 |
| மரணப் பிரமாதம் நமக்கில்லையே | 10 - 12 |
| அறநெறி கூறும் திருக்குறள் | 13 - 16 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும் ....... | 17 - 20 |
| யாக்கை நிலையாமை | 21 - 24 |
| மனம் போல் வாழ்வு | 25 - 27 |
| இலட்சியத்துடன் கூடிய வாழ்க்கை ...... | 28 - 30 |
| திருவாசக விழா | 31 - 33 |
| அன்பு மார்க்கம் | 34 - 38 |
| பேரின்பத்தை உணர்த்தும் சிருங்கார...... | 39 - 42 |
| சந்நிதி முருகனும் சந்நிதியான் ஆச்சிரம ...... | 43 - 44 |
| ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் | 45 - 46 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதிக்கந்தன் திருத்தல புராணம் | - 47 |
| சந்நிதியான் | 48 - 52 |


அன்பளிப்பு : மலர் ஒன்று 30 /- ரூபா

வருடச்சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு.

உ

சிவமயம்

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்

( இரண்டாவது குருமஹா சந்நிதானம் )

அவர்கள் வழங்கிய

# அருளாசிச் செய்தி

அன்புள்ளங்களே!

"சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகை தனது நான்காவது ஆண்டில் காலடி வைப்பதையிட்டு மனநிறைவடைகின்றோம். சமயத்தின் பெயரால் இந் நாட்டில் வெளிவரும் சஞ்சிகைகளில் ஞானச்சுடர் ஒரு தனித்துவமான செயற்பாட்டைக் கொண்டது. விஞ்ஞானமும் அறிவும் வளர்ச்சி அடையும் இக்காலத்தில் மெஞ்ஞான உண்மைகளை எழுத்து வடிவில் தந்துகொண்டிருப்பது எல்லோரது வரவேற்பையும் பெற்றுள்ளது. சஞ்சிகை இந் நாட்டில் மட்டுமின்றி பிற நாடுகளுக்குச் சென்று அங்குள்ள சைவ மக்களுக்கும் சிந்தனையைத் தூண்டுகின்றது. இப்பத்திரிகையின் பணி. குறித்த காலங்களிலேயே சஞ்சிகை வெளிவருவதும் நெருக்கடியான சூழ்நிலையிலும் கூட மாதம் தவறாது வெளிவரும் சஞ்சிகை ஞானச்சுடர். அன்னதானக் கந்தன் எனப் பெயர்பெற்ற சந்நிதி முருகனுடைய அருளைப் பெறும் அடியவர்களுக்கு ஞானச்சுடர் செய்யும் பணி அளவு கோலால் அளவிட முடியாது. இம் மலரின் அம்சங்களாக தத்துவங்கள், சமய ஆக்கங்கள் வரலாறுகள் என பல சிறப்புக்களை கொண்டுள்ளது. இச் சஞ்சிகை ஆசிரியர்களையும் நிர்வாக உறுப்பினர்கள், தொண்டர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்க பிரார்த்திக்கின்றோம். இம்மலர் தொடர்ச்சியாக வெளிவந்து அதன் பணிகள் சிறக்க இறைவனை வேண்டுகின்றோம்.

'' என்றும் வேண்டும் இன்ப அன்பு ''

OOO

உ

சிவமயம்

கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி

( சமாதான நீதிபதி, தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் )

அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

செல்வச்சந்நிதி முருகன் எங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட பெருமான். கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாகப் பெருமானுடைய திருக்கோயிலுக்குச் சென்று தொழுது வருகின்ற சிறப்பு எனக்கும் உண்டு. அந்த நிலையிலே இன்று உடல் நலிவடைந் தாலும் உள்ளம் நலிவடையாமற் பெருமானைத் தியானிக்கின்ற வழக்கம் எனக்கு உண்டு ஆலயச்சூழலில் அமைந்திருக்கின்ற அறச் சாலைகளிலே சந்நிதியான் ஆச்சிரமம் தலை சிறந்ததாகும். படித்த வர்களுக்கு ஞான விரிவுரைகளும் பசித்தவர்களுக்கு நிறைவான அன்னதானமும் பரிபூரணமாகக் கிடைக்கின்ற இடம் இதுவாகும். மேலும் இந்நிறுவனத்தின் வெளியீடாக எமக்குக் கிடைப்பதே ஞானச்சுடர் என்ற சஞ்சிகையாகும். இச்சஞ்சிகை நான்காவது ஆண்டில் காலடி வைக்க இருப்பது குறித்து மிக மகிழ்ச்சியடை கின்றேன். சந்நிதி முருகனின் தன்னிகரில்லாத் தொண்டராக ஆச் சிரமத்தின் சுவாமிகள் ஆச்சிரமக் கடமைகளில் மிகவும் அக்கறை காட்டி வருகிறார். அவரை வாழ்த்தி வணங்கவேண்டிய கடமை முருக பக்தர்கள் அனைவருக்கும் உண்டு. எனவே மேற்படி மலர் வெளியீடு தொடர்பாகக் கந்தப்பெருமான் அடியவர்களையும் தன் னலங்கருதாப் பேரவையினரையும் வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

உ

சிவமயம்

இந்து சமயப் பேரவையின் கௌரவ செயலாளர்

சிவஞானி சி. சக்திகிரீவன் அவர்கள் வழங்கிய

## வாழ்த்துரை

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம - சைவ,கலை பண்பாட்டுப்பேரவை வெளியிடும் ஞானச்சுடர்ச் சஞ்சிகையானது 3 ஆம் ஆண்டை நிறைவுசெய்து 4 ஆம் ஆண்டிற் காலடி வைக்கும் இந்நாளில் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் எமது நாட்டில் இந்துமத எழுச்சியை ஏற்படுத்தும் நோக்கில் வெளிவரும் சஞ்சிகைகளில் ஞானச்சுடர் முதன்மையானது.

இச்சஞ்சிகை மாதந்தோறும் தப்பாது அரியபெரிய சிந்தனை மிக்க கருத்துக்களைத் தாங்கிக்கொண்டு தொடர்ந்து வெளிவந்து கொண்டேயிருக்கிறது.

சந்நிதியான் ஆச்சிரமம் செய்யும் பணிகள் பலவற்றுள்ளும் இச்சஞ்சிகை வெளியீடு காலத்திற்கேற்ற ஒன்றாக அமைந்துள்ளது.

இவ்வாச்சிரமமும், கலை பண்பாட்டுப் பேரவையும் இதனைச் சீரிய முறையில் முருகப்பெருமானின் திருவருள் துணைக்கொண்டு மறைந்து நின்றுஇயக்கி வரும் ஆச்சிரம சுவாமி அவர்களும், பேரவையினரும் பல்லாண்டு வாழ ஸ்ரீ பார்வதி பரமேஸ்வரனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

# தை மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திரு. கு. கங்கைவேணியன்
( வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம் )

திரு. சி. தங்கவடிவேலு
( சிற்றி வெதுப்பகம், தும்பளை )

திரு. நா. குணரெட்ணம்
( புதிய யாழ் வைத்தியசாலை, ஆனைப்பந்தி )

உரிமையாளர்
( பாக்கியரெட்ணம் ஹாட்வெயர்ஸ், சங்கானை )

திரு. மு. தர்மலிங்கம்
( சிங்காரராசா வாசா, உடுப்பிட்டி )

திரு. க. சோமசேகரம்
( மகாராணி புடவையகம் )

திரு. வே. கந்தையாபிள்ளை அன்சன்ஸ்
( 49, கே. கே. எஸ் வீதி, யாழ். )

உரிமையாளர்
( மலாயன் கபே, பெரியகடை யாழ். )

திரு. S. ஞானரூபன்
( அஜந்தாஸ் பெரியகடை, யாழ். )

திரு. செ. மதியாபரணம்
( வளர்மதி புடவை அகம், கே. கே எஸ் வீதி யாழ். )

உரிமையாளர்
( கிருஸ்ணாஸ், சங்கானை )

திரு ந. சிவரெத்தினம் ( முகாமையாளர் )
( இலங்கை வங்கி, காங்கேசன்துறை )

திரு. க. தர்மலிங்கம் J. P.
( நீர்வேலி, தெற்கு )

திரு. க. சி. பகவத்சிங்கம் ( அதிபர் )
( யாழ்/ சிறுப்பிட்டி இ. த. க. பாடசாலை )

திரு. இரா. ஸ்ரீநடராசா
( லிங்கோ கல்வி மன்றம், உடுப்பிட்டி )

திரு. நீ. சுப்பிரமணியம்
( கொள்வனவு உத்தியோகத்தர் உடு. ப. நோ. கூ. சங்கம் )

உரிமையாளர்
( லிங்கம் கிறீம் ஹவுஸ், யாழ். )

செல்வி தாட்சாயினி - செல்வமாணிக்கம்
( நாவலடி, உடுப்பிட்டி )

திரு. பொன். நேசதுரை
( அரசடி வீதி, சங்கானை )

திரு. K. சிவகுருநாதன்
( பலாலி வீதி, யாழ்ப்பாணம் )

திரு. வ. சண்முகநாதமுதலி
( மக்கள் வங்கி, யாழ்ப்பாணம் )

திரு. செ. இராசலிங்கம்
( பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானை )

திரு. நா. கந்தப்பு
( தோப்பு, அச்சுவேலி )

உரிமையாளர்
( கண்டி ஸ்ரோர்ஸ், அச்சுவேலி )

உரிமையாளர்
( ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம், கே கே. எஸ். வீதி, யாழ். )

திரு. J. பிரபாகரன் மாஸ்டர்
( சுப்பமாக்கற், நெல்லியடி - கரவெட்டி )

திரு. வே. இரத்தினசிங்கம்
( சிவசக்தி மோட்டோர்ஸ் & தொலைத்தொடர்பகம் பருத். )

திரு. சி. கணேசலிங்கம்
( தமிழ்ப்பூங்கா, நெல்லியடி )

திரு. செ. கமலநாதன் (கமல்)
( கணபதி களஞ்சியம், வலவந்தோட்டம் கரணவாய் தெற்கு )

திரு. கி. அமிர்தலிங்கம்
( மக்கள் வங்கி, நெல்லியடி )

# ஞானச்சுடர் வாசகர் போட்டியில்
# பரிசுபெறுவோர் விபரம் - 2000

முதலாம் இடம் :

செல்வி அம்பாலிகா தம்பாபிள்ளை
( சுதுமலை தெற்கு )

இரண்டாம் இடம் :

செல்வி சுபாஷனி புகழேந்தி
( சிவன் கோவிலடி, புத்தூர் மேற்கு )

மூன்றாம் இடம் :

திரு. ஜெ. பேரானந்தம்
( 68, இராமநாதன் வீதி, கலட்டி யாழ். )

## ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம்

நாகரெத்தினம் மாதவன்
( ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை )

தர்மலிங்கம் தவச்செல்வன்
( கேணியடி, உடுப்பிட்டி )

தமிழ்வாணி வேலாயுதம்
( வீரப்பதிராஜன், கரணவாய் தெற்கு )

ர. வாகீசன்
( சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு )

சிவநிதி கந்தசாமி
( மதவடிவேன், கட்டுடை )

பிறேமினி ஜெயராஜசிங்கம்
( முடக்கன் தோட்டம், அல்வாய் )

நவரெத்தினம் கேமந்தினி
( ஆனந்தாவீதி, மானிப்பாய் )

இராசரெத்தினம் வேல்குமார்
( 1-ம் குறுக்கு வீதி, இணுவில் )

புவனேஸ்வரி வைத்திலிங்கம்
( செல்லத்துரை வீதி, மல்லாகம் )

சி. சுபமதி
( உயரப்புலம், ஆனைக்கோட்டை )

---

மாணவர் பக்கம்

மாசி மாத மலரில்

இடம்பெறும்.

○○○○○
○○○

---

ஞானச்சுடர் சந்தாதாரர்களாக சேரவிரும்புவோர்
கடித மூலமோ அல்லது நேரடியாகவோ
தொடர்பு கொள்ளவும்.

உ





# சந்நிதியான் ஆச்சிரம
# சைவ கலை பண்பாட்டுப் பேரவை

## தொண்டைமானாறு

ஸ்தாபிதம் : 27-09-1992

### போஷகர்கள் :

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய ஸ்வாமிகள்
[ நல்லை ஆதீன முதல்வர் ]

சிவஸ்ரீ பண்டிதர் சைவப்புலவர்
கை. நமசிவாயக்குருக்கள்
[ சைவசமய ஆசிரிய ஆலோசகர் ]

சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர் J. P.
[ வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரதமகுரு ]

பிரம்மஸ்ரீ ப. மனோகராக்குருக்கள்
[ வல்வை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் ]

**தலைவர் :**
சி. நாகலிங்கம்
[ தொழிலதிபர் ]

**செயலாளர் :**
ந. அரியரெத்தினம்
[ அதிபர் யா / தொண்டைமானாறு, வீரகத்திப்பிள்ளை ம. வி. ]

**பொருளாளர் :**
செ. மோகனதாஸ்
[ நிர்வாகி, சந்நிதியான் ஆச்சிரமம் ]

**உபதலைவர் :**
க. சிவக்கொழுந்து J. P.
[ உடுப்பிட்டி ]

**உபசெயலாளர் :**
பண்டிதர் க. முத்துவேலு
[ இளை. ஆசிரியர் இமையாணன் ]

**உபபொருளாளர் :**
செ. நடராசா
[ இடைக்காடு ]

### நிர்வாகசபை உறுப்பினர்கள் :

A. அரசபிள்ளை
[ கல்வியங்காடு ]

க. கந்தசாமி
[ ஓய்வு பெற்ற தபாலதிபர், கரணவாய் ]

க. அருள்லிங்கம்
[ சங்கானை ]

சி. நவரெத்தினம்
[ ஓய்வு பெற்ற ஆசிரியர், கரணவாய் ]

இசைமணி சி. துரைராசா
[ கெருடாவில் ]

சே. ரவீந்திரநாதன்
[ உடுப்பிட்டி ]

இ. புஸ்பநாதன்
[ உரும்பிராய் ]

# "ஞானச்சுடர்"

## மார்கழி மாத வெளியீடு

வெளியீட்டுரை :-

மலருக்கான வெளியீட்டுரையை ஆசிரியர் திரு. ச. லலீசன் அவர்கள் வழங்கினார்கள். ஆச்சிரமத்தினுடைய பணிகளையும், பேரவையின் பணிகளையும் அடியார்களுக்கு எடுத்துக்கூறினார்கள்.

இங்கே இவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் மிகவும் சிறப்புப்பொருந்தியதாக இந்தமலர் வெளியீடு அமைந்திருப் பதனை எடுத்துக்காட்டிய அவர்கள் இந்தப்பணிகள் தொடர்ந்து மேற் கொள்ளப்படவேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்கள்.

அத்துடன் மேற்படி மலரின் வெளியீட்டுரைக்கு பிரம்மஸ்ரீ கு. தியாக ராசசர்மா அவர்கள் வருகைதரமுடியாத காரணத்தால் திரு. லலீசன் அவர்கள் தான் கலந்துகொண்டதுபற்றி குறிப்பிட்டு சர்மா அவர் களால் அனுப்பப்பட்ட வாழ்த்துரையையும் சபையினருக்கு வழங்கி னார்கள்.

மதிப்பீட்டுரை :-

மதிப்பீட்டுரையை மதுரகவி M. P. காரை அருளானந்தம் அவர் கள் மேற்கொண்டார்கள். ஞானச்சுடரின் மார்கழிமாத இதழ் எமது பிரதேசத்திற் போற்றி வாழ்த்தப்படவேண்டிய பெரியார்கள் பலரின் தகவல்களை உள்ளடக்கி வெளிவந்திருப்பதன் சிறப்பை ஆரம்பத் திற் சுட்டிக்காட்டினார்கள்.

காலத்திற்குப் பொருத்தமான கட்டுரைகள் மலரில் இடம் பெறுவதுடன் ஆய்வுக்கட்டுரைகள், பாரதம் போன்ற இதிகாசக் கதைகள், சமகாலத்திற்குப் பொருந்தக்கூடிய சிந்தனையைத்தூண்டும் கட்டுரைகள், ஆலயத்தின் சிறப்பை வெளிப்படுத்தும் கட்டுரைகள் எனப் பலவகைப்பட்ட கட்டுரைகளும் சுடரில் இடம்பெற்றிருப்பதை ஒவ்வொன்றாக எடுத்துக்காட்டினார்கள். இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட ஞானச்சுடர் 21 ஆம் நூற்றாண்டில் எமது பிரதேசத்தின் பொக்கிஷமாகப் பேணிப்பாதுகாக்க வேண்டிய ஒரு சொத்து என்ப தையும் சுட்டிக்காட்டினார்கள்.

இறுதியில் மலரில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கட்டுரை யினதும் ஆழமான கருத்துக்களை அடியார்களுக்குக் கவிச்சுவையுடன் எடுத்துக்கூறினார்கள்.

# நான்காவது வயதில்...

ஞானச்சுடர் எமது மண்வாசனையுடன் ஒரு ஆத்மீகச் சஞ்சிகையாக நான்காவது வயதில் காலடி வைப்பதையிட்டு எமது மகிழ்ச்சியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

விளம்பரம் எதுவுமின்றி, வியாபார நோக்கு இல்லாது குறித்த கால ஒழுங்கில், அனைத்து வாசகர்களுக்கும் பயன்படக்கூடிய ஆக்கங்களைக் கொண்டதாய், தெய்வீகப் பொலிவுடன், அன்பர்கள் பலரின் ஆக்கங்களை உள்ளடக்கிய கூட்டு முயற்சியாக சுடர் வெளிவந்துகொண்டிருப்பது இந்த மலருக்குரிய தனித்துவமான அம்சங்களாகும்.

சுடர் பிரகாசிப்பதற்கு ஆக்கங்களை வழங்கிக்கொண்டிருக்கின்ற சமயப்பெரியோர்களையும், அறிஞர் பெருமக்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூர்ந்து அவர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமமும், அதனோடு இணைந்து செயற்படும் பேரவையும் மேற்கொண்டுவரும் பல்வேறு தொண்டுகளில் ஞானச்சுடர் வெளியீடும் ஒரு செயற்பாடாகும். எமது மண்ணில் காலத்தின் தேவையாக இதனைக்கருதுவதாலேயே இந்த சஞ்சிகையை வெளியிட ஆரம்பித்தோம். இன்று ஞானச்சுடர் வாசகர் மத்தியில் தனக்கென ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது மட்டுமன்றி இதனுடைய தொடர்ச்சியான வெளியீடும் தவிர்க்கமுடியாதது என்ற நிலைக்கு அவர்களின் ஆர்வங்கள் எங்களை இட்டுச்சென்றுள்ளது.

சுடர் தொடர்பான ஆர்வத்தை மக்கள் மத்தியில் மேலும் அதிகரிப்பதற்காகவும், அதனை மக்கள் தொடர்ந்து பேணவேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காகவும் வாசகர் போட்டியை நடாத்தி வருகின்றோம் வயது வேறுபாடின்றி ஏராளமான வாசகர் இதில் பங்குபற்றி வருவது எமக்கு மேலும் ஊக்கத்தை வழங்கிவருகிறது.

தூய்மையான நோக்கத்துடன் வெளிவந்துகொண்டிருக்கும் எமது சுடர் மேலும் பிரகாசிப்பதற்கு சந்நிதியானின் திருப்பாதங்களைப் பணிகின்றோம்.

பேரவையின் சார்பில்
செயலாளர்

# சுடர் தரும் தகவல்

இன்று நாட்டில் ஒழுங்கு, கட்டுப்பாடுகள் என்பன சீரழிந்து இருப்பதைப் போல் நாட்டில் நடைபெறும் சில நல்ல செயற்பாடுகள் கூட பொருத்தமற்றவையாக இடம்பெற்று வருகின்றன போலத் தோன்றுகின்றது.

வெளிநாட்டில் கடமையாற்றிக்கொண்டிருக்கும் நம்மவர்கள் அனுப்புகின்ற பணத்தின் மூலமும், வேறு வழிகளில் கிடைக்கும் நிதியைக் கொண்டும் ஆலயப் புனரமைப்பு, புது மெருகூட்டுதல் போன்றன இடம்பெற்று வருகின்றன இவை வரவேற்கத்தக்க விடயங்களே. ஆலயத்தைச் சிறப்படையச் செய்வதன்மூலம் அந்தக் கிராமம், அந்தப்பகுதி சிறப்படைகின்றது என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையே. ஆனாலும் இந்தச் செயற்பாடுகளில் கூட பல குறைபாடுகள் இடம்பெறுகின்றன போலத் தோன்றுகிறது.

சில ஆலயங்கள் மிக ஆடம்பரமாகவும், வேறு சில ஆலயங்களில் தேவைக்கு அதிகமாகவும், இன்னும் சில இடங்களில் விதிமுறைகளை மீறியும் கூட இந்த புனரமைப்பு, புது மெருகூட்டுதற் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதே போல சில ஆலயங்களில் காலத்திற்கு ஒவ்வாத மிக ஆடம்பரச் செலவுகளில் திருவிழாக்கள், போன்றவையும் இடம்பெற்று வருகின்றன.

அதே நேரம் முதியோர் பராமரிப்பு, ஏழைச் சிறார்கள் பராமரிப்பு, மற்றும் தர்ம காரியங்களில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு உதவுதல், அநாதைகள், ஏழைகளுக்கு உதவுதல் போன்றன சமூகத்தின் தேவைகளாக உள்ளன என்பதை இவர்களில் பலர் சிந்திக்க மறுக்கின்றனர்.

இந்த நிலையில் ஏனைய சமயத்தவர்கள் ஊடுருவுகின்றனர். எமது சமயத்தவர்கள் மதம் மாறுகின்றனர் என்று நாம் சமுதாயப்பற்றும், சமயப்பற்றும் உள்ளவர்கள் போலச் சிந்திப்பதும், மேடைகளில் பேசுவதும் அர்த்தமற்றதாகும்.

ஏழைமீது காட்டும் அன்பிலேதான் இறைவனைக் காணலாம். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற உயர்ந்த உன்னதமான சமயப் பாரம்பரியத்தை உடைய நாம் இவை ஒன்றும் தெரியாதவர்கள் போல அல்லது இவற்றை எல்லாம் மறந்தவர்கள் போல ஆலயங்களை மட்டும் அழகுபடுத்துவது நியாயம்தானா?

○★○

உ

அத்தியாயம் - 10

# ஸ்ரீ முருக மந்திரம்

## சொல்லே புனையுஞ் சுடர்வேலவனே

- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் -

பக்தன் ஒருவன் இறைவனை வழிபடும்பொழுது அவனுடைய கருவி கரணங்கள் யாவும் இறைவன்பால் இலயிக்க வேண்டும். இறைவனை மனத்தாற் சிந்திக்க வேண்டும்; காயத்தால் வந்திக்க வேண்டும்; வாக்கால் வாழ்த்த வேண்டும்; மனத்தாற் செய்த பாவங்கள் சிந்திப்பதால் நீங்கும்; காயத்தாற் செய்த பாவங்கள் வந்திப்பதால் நீங்கும்; வாக்காற் செய்த பாவங்கள் வாழ்த்துவதால் நீங்கும். பொறாமை, ஆசை, கோபம், பகை முதலியன மனத்தாற் செய்யும் வினைகள் ஆகும். களவு புரிதல், கொலை செய்தல், புலால் உண்ணல், பிறன்மனை சேரல் என்பன காயத்தாற் செய்யும் வினைகள் ஆகவும். பொய்புறங்கூறல், கடுஞ்சொல் ஆகியன வாக்காற் செய்யும் வினைகள் ஆகவும் காணப்படுகின்றன. மயில்வாகனனாகிய முருகனோடு இணைந்தவர்களுக்கு இயமனைக் காணவேண்டிய வாய்ப்பு ஏற்படாது. முருகனோடு இணைந்தவர்கள் பிறப்பு



இறப்பற்ற தன்மையை அடைவார்கள். நீர்க்குமிழி போல் தோன்றி மறையும் நிலையில்லாத உலக வாழ்வை நிந்தித்து ஒழிக்கின்ற பக்குவமும் ஏற்படவில்லை. இறைவன் திருவடிப் பேற்றினை அடைதலே உண்மையான இன்பம் ஆகும் என்பதையும் உணராமல் தவிக்கிறேன். செவ்வேளாகிய முருகனைச் சிந்திப்போர்க்குக் கூற்றுவனை எதிர்க்கும் ஆற்றலும் மனோதைரியமும் உண்டாகும். முரு

எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் தடுமாறாதே.

களை வணங்கும் அடியார்களுக்கு உடம்பிற்குவரும் நோய்கள் எதுவும் பாதிப்பினைச் செய்யாது. இதனைப் பின்வரும் கந்தரலங்காரப்பாடல் தெளிவாக விளக்குகிறது.

சிந்திக்கிலேனின்று சேவிக்கிலேன் றண்டைச் சிற்றடியை
வந்திக்கிலே னொன்றும் வாழ்த்துகிலேன் மயில்வாகனனைச்
சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேனுண்மை 'சாதிக்கிலேன்
புந்திக்கிலேசமும் காயக்கிலேசமும் போக்குதற்கே.

இறைவன் ஆன்மாக்களுக்கு அருள்புரியும் பொருட்டு மாயையில் இருந்து முப்பத்தாறு தத்துவங்களையும் தோற்றுவித்தான். ஆணவ இருளில் அமிழ்ந்திப் போய் இச்சை, செயல், ஞானம் எதுவுமின்றி அழுந்திக் கிடந்த ஆன்மாக்களுக்குத் தனு. கரண, புவன போகங்களை இணைத்து உலக வாழ்க்கையில் ஈடுபடும்படி இறைவன் விட்டுள்ளான். உயிர்களின் மலத்தைத் தேய்த்துத் திருவருட் சக்தியைப் பெறுவதற்கு மாயையில் இருந்து தோன்றும் காரியங்கள் துணைபுரிகின்றன. இவ்வாழ்க்கை என்னும் மாயவாழ்வில் அடியேனைச் சிக்க வைத்தீர். நீயேனுடைய அறிவின்மையால் ஏற்படும் குற்றங்களைப் பொறுத்துக்கொண்டிரில்லை ''விநாச கால விபரீத புத்தி'' என்ற வாக்கிற்கு அமைய அடியேன் தெரியாமற் செய்த தவறுகளைப் பொறுத்து அருள் புரிய வேண்மென்று இறைவனை இரந்து அருணகிரியார் வேண்டுகிறார். மற்போர் புரிவதற்கான பன்னிரண்டு திருத்தோள்களிலும் அடியேனுடைய பாமாலைகளைத் தரித்துக்கொள்ளும் என ஞான பண்டிதனை அருணகிரியார் வேண்டுவதைப் பின்வரும் அநுபூதிப்பாடல் விளக்குகிறது.

இல்லே எனு மாயையில் இட்டனைநீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே
மல்லேபுரி பன்னிரு வாகுவில் என்
சொல்லே புனையுஞ் சுடர் வேலவனே.

சூரியன் மேற்கே மறைகின்ற பொழுது வானம் செக்கச் செவேல் என்று காட்சி தரும். அங்கே முருகனின் வேல் பிறை மதிபோலக் காட்சி தருகிறது. சிவபெருமான் பகல்போலத் திருநீறுபூசிய திருமேனியுடன் காட்சி தருகிறார். உமாதேவியார் பசுமையாகிய மரகத நிறத்துடன் திகழ்கின்றார். இருவருக்கும் இடையே சிவந்த மலைபோல் வேலவன் விளங்குகின்றார். இறைவன் புறக்கண்ணாற் பார்க்கின்ற பூதப்பொருள் அல்

லர், அகக்கண்ணாற் பார்க்கின்ற ஞானவடிவினனே ஆவான். ஆறுமுகப் பெருமான் அருணகிரிநாதருக்கு அருணையில் குருமூர்த்தியாக வந்து "சும்மா இரு சொல்லற" என்று உபதேசித்தருளினார். பொறி புலன்கள் யாவும் கடந்த அனுபவத்தில் விளைகின்ற அநுபூதியின்பத்தை இறைவன் திருவருளால் அருணகிரியார் பெற்றிருந்தார். அநுபூதி நிலையில் விளைந்த பேரின்பப் பேற்றை வார்த்தைகளால் விளக்க முடியாது.

செம்மையான வானவுருவத்துடன் விளங்கும் வேற்பெருமான் உபதேசித்த உபதேசத்திற்கு நிகரானது வேறொன்றுமில்லை. இவ்வாறு முருகப்பெருமானுடைய உபதேசத்தால் உணர்ந்த சுகாநுபூதியைத் தமக்குள் உணர்வதேயல்லாமல் மற்றெவருக்கும் வார்த்தைகளால் விளக்க முடியாது. மேற்கூறிய உண்மையைக் கந்தரநுபூதியின் முப்பதாவது பாடல் பின்வருமாறு விளக்குகிறது.

செவ்வானுருவில் திகழ்வேலவன் அன்
றொவ்வாத தென உணர்வித்தது தான்
அவ்வாறறிவார் அறிகின்றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப்பதுவே.

இந்த உலக வாழ்வு நிலையில்லாதது; விரைவில் அழியும் தன்மை உடையது. இதனை என்றும் நிலையானதாக எண்ணி அழிதல் கூடாது. இத்தகைய அழியும் இயல்புடைய வாழ்வைப் பொருளாகக் கருதாது கந்தவேட் பெருமானின் திருவடிப்பேற்றை விரும்பித் தவம் புரிய முயலுதல் வேண்டும். முன் செய்த வினை பக்குவப்பட்டுப் பிராரப்தமாகி இவ்வுடம்பாக வந்தது. "வினைப் போகமே ஒரு தேகங்கண்டாய்" என்பார் திருவெண்காடர் நோக்கம். அதை அடையும் மார்க்கம்; இதற்கிடையில் ஏக்கம் இதுதான் வாழ்க்கை என்று தற்காலக் கவிஞன் ஒருவன் உலகியல் வாழ்க்கை பற்றித் தனது பாடலிற் குறிப்பிடுகிறான். இந்தப் பூதவுடலையும் சுமந்துகொண்டு கதி எதுவென்று தெரியாமல் தடுமாறி மனம் வேதனைப்படுவதைப் பின் வரும் கந்தரலங்காரப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

கதிதனையொன்றையுங் காண்கின்றிலேன் கந்தவேள் முருகா
நதிதனையன்னபொய் வாழ்விலன் பாய்நரம்பாற் பொதிந்த
பொதிதனையுங் கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்து நொந்திங்கேயென்றன் மனம் வேகின்றதே.

முற்பிறப்பிற் செய்த நல் வினை தீவினைகளுக்கு ஏற்ப நியாயத் தீர்ப்புக்கூறி வினைப் பயன்களை நுகருமாறு இறை வன் ஒவ்வொரு ஆன்மாவையும் பிறவி எடுக்க வைக்கிறார். நாம் நுகரும் இன்ப துன்பங்கட்குக் காரணம், நாம்செய்த நல்வினை தீவினைகளேயாகும். நாம் அநு பவிக்கும் இன்ப துன்பங்கள் அனைத்திற்கும் இறைவன் காரணனல்லர். கர்மத்துக்கேற்ற பலனை ஒருவன் அடைவதிலி ருந்து தடுத்து நிறுத்த உலகத்தி லுள்ள எந்த ஒரு சக்தியாலும் முடியாது. ஒவ்வொரு தனிமனித னுடைய சிந்தனையும் சொல் லும் செயலும் நித்திய தெய் வீகத் துலாக்கோலில் நாளாந் தம் நிறுத்தப்படுகின்றன. நற் செய்கை இன்பத்தைத் தருவ தைப் போலவே தீய செய்கை துன்பத்தைத் தரும்.

மயிலை வாகனமாகக் கொண்ட முருகப்பெருமானே! பாழ்பட்டு அழியும் இவ் உலக வாழ்வு என்னும் மாயைப் படு குழியில் என்னை விழுமாறு விட் டதற்கான காரணம் யாதோ? அடியேன் முற்பிறப்பிற் செய்த குற்றங்களுக்குத் தந்த தண்ட னைதான் இதுவோ! உன்னு டைய அடிமையாகிய என்னை இப்படித் தவிக்க விடுவது தகுமோ! நம்பிய அடியவனை நட்டாற்றில் விடுவதுதான் தெய் வத்தின் செயலோ என நிந்தாஸ் துதியாக அன்புரிமையோடு அருணகிரியார் முருகனைப் பாடு வதைப் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகிறது.

பாழ்வாழ் வெனுமிப் படுமாயையிலே
வீழ்வாயென என்னை விதித்தனையே
தாழ்வானவை செய்தன தாமுளவே
வாழ்வாய் இனிநீ மயில்வாகனனே.

இன்றைய உலகில் கல்வி அறிவு பெற்றவர்களே பல திருகு தாளங்களைச் செய்கிறார்கள். தர்மத்திற்கு மாறாக அனைத் தையும் செய்துவிட்டுத் தாம் செய்த செயல்கள் யாவற்றை யும் நியாயப் படுத்தப் பார்க்கி றார்கள். ஒவ்வொருவருக்கும் உள்ளே நின்று பேசுகின்ற தெய் வத்தின் குரலாகிய மனச்சாட்சி யையும் மழுங்கடித்து வாதம் புரிய இவர்கள் கற்ற கல்வியறி வைப் பயன்படுத்துகிறார்கள். இறைவனை அடைவதற்குக் கல் விச் செருக்கும் தடையாக இருக் கிறது. என்பதைக் "கல்வி என் னும் பல்கடற் பிழைத்தும்" என மணிவாசகப் பெருமான் திருவாசகத்திலே போற்றித் திரு வகவலிற் குறிப்பிடுகிறார்.

பக்தியில்லாமற் செய்யப்ப டும் வெறும் கிரியைகளாலும், நாம் கற்ற கருவி நூல்களின்

துணையினால் வாதப் பிரதி வாதங்கள் செய்வதனாலும் ஆன்மா இறையருளைப் பெற முடியாது. சிதறிப்போகும் சிந்தனைக் கதிர்களை ஒரு கணப் பொழுதாகிலும் இறைவனை நோக்கித் திருப்ப வேண்டும். மனத்தை அகமுகமாக உள்ளே செலுத்தினாற் பிறவி நோய் நீங்கும் என்பதனைச்

சாத்திரம் ஓதுஞ் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி அகல விட்டோடுமே.

எனத் தமிழ் மந்திரமாகிய திருமந்திரம் விளக்குகிறது. சமய வாதங்கள் கடந்த மோன நிலையிலேயே அநுபூதி சித்திக்கும். இதனை ''வாதமும் சமயபேதமுங் கடந்த மனோலய இன்ப சாகரமே'' எனப் பட்டினத்தடிகள் தமது பாடலில் குறிப்பிடுகிறார்.

வாதித்து அறியும் பாசஞானம் என்னும் கருவியினாற் கந்தவேளின் திருவடியை அடைய முடியாது. சார்ந்ததன் வண்ணம் ஆகும் இயல்புடைய ஆன்மா தர்க்க மயமாகவே ஆகிவிடுகின்றது. சினத்தால் மனத்தில் அமைதியின்றித் தர்க்கமிட்டு வாழ்நாளை வீழ்நாள் ஆக்குதல் கூடாது.

முருகப்பெருமான் கொலைத் தொழிலைச் செய்கின்ற வேடர் குலத்தில் வளர்ந்தவரும் பெண் யானை போன்றவரும் ஆகிய வள்ளிநாச்சியாரைத் தழுவி மகிழ்கின்றார். கிரவுஞ்ச மலையைப் பிளந்து வெற்றிபெற்ற தேவசேனாதிபதியே முருகப் பெருமான் ஆவார். சாத்திரங்களைக் கலக்கத்துடன் பேசிச் சமயவாதிகளுடன் வாதிட்டு அலையாமல் உன் திருவடியநுபூதியைத் தந்தருள வேண்டுமென்பதைப் பின்வரும் அநுபூதிப் பாடல் விளக்குகிறது.

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமாறதுவாய் விடவோ
கொலையே புரிவேடர் குலப்பிடிதோய்
மலையே! மலைகூறிடு வாகையனே.

தொடரும்......

---

தாயின் உள்ளத்துக்குள் இருக்கும் ஆழ்ந்த அறிவற்ற வலுவான அன்பின் சுவை, இந்தப் பரந்த உலகத்தில் வேறெங்கும் கிடையாது.

உண்மையை உணர்ந்தால் துக்கம் தீரும்.

# கடவுள்

( மு. திருநாவுக்கரசு )

நம்மிற் பலரும் ஆறாம் அறிவான பகுத்தறிவின் துணைக் கொண்டு, கடவுள் என்றொரு மாபெரிய சக்தி உண்டு என உணர்கின்றோம். அதுவே இந்த அண்ட சராசரங்களையும் அவற்றில் வாழும் பலகோடி ஜீவராசிகளையும் இயக்குகின்றது எனப் பூரணமாக நம்புகின்றோம்.

வாழ்விலே சோதனைகளும் வேதனைகளும் வரும்போதும் ஒரு ஆத்திகனும் சில சமயம் கடவுள் என்று ஒன்று உண்டோ? எனச் சந்தேகிப்பதும் உண்டு. சிலசமயங்களில் அதுவே அவனை நாஸ்திகனாக்குவதும் உண்டு. இவர் போன்றவர்களை விட, ஆண்டவன் இல்லவே இல்லை எனப் பட்டிமன்றம் அமைத்து வாதிடும் பகுத்தறிவாளரெனப் பறை சாற்றுவோரும் உளர். இவர்கள் கடவுளை நேரிற் காட்டினால் அன்றித் தாம் கடவுள் பற்றிக் கதைக்கவே விரும்பவில்லை என தம் கருத்தை நிலை நாட்டமுடியாமல் திண்டாடுவதையும் காண்கின்றோம்.

இப்பேற்பட்டவர்கள் பற்றி நாமெல்லாம் அதிகம் அரற்றிக் கொள்ளத் தேவையில்லை என்பது உலகின் பகுத்தறிவாளரின் சிகரம் எனப் போற்றப்படும் பொய்யாமொழியார் கருத்தாகும்.

" உலகத்தார் உண்டென்பது இல்லையென்பான் வையத்து
அலகையாய் வைக்கப்படும். " ( 850 )

எனத் தெய்வப்புலவர் தெளிவு படுத்தியுள்ளார். இதன்படி உலகில் உயர்ந்தோர், உண்டு என்பதனை இல்லை என மொழிபவன் எவனோ அவன் ஒரு பேயாகக் கணிக்கப்படுவான், என மிக இரத்தினச் சுருக்கமாக விளக்கி; அவன் மனித உருவெடுத்து உலவினாலும் அவனை மக்கள் ஒரு பேயாகக் கணித்துத் தாமே விலகிக்கொள்வதுமேல் எனச் சுருங்கச்சொல்லி மிக விளங்க வைத்துள்ளார்.

இனிக் கடவுள் என்ற பதத்தின் உட்பொருளைச் சற்றே ஆழமாக நோக்குவோமேயானால், ' கடவுதல் ' என்றசொல்

லின் அடியொற்றியதே 'கடவுள்' என்ற பதமாகும். 'கடவுதல்' என்பது செலுத்துதல் என்ற பொருளைக் குறித்து நிற்கின்றது, எதைச் செலுத்துகின்றது என ஆராயின், சர்வ உலகங்களையும் அனைத்து உயிர்களையும், செலுத்துபவன்தான் கடவுள் என உணரமுடிகின்றது.

விமானத்தைக் காண்கின்றோம் அது தரையில் ஓடி பின் மிக உயர வானத்திற் பறக்கின்றது. இதனை யார் எங்கிருந்து எப்படி ஓட்டுகிறான் என்பதனைத் தரையிலே நின்று பார்ப்பவனால் சற்றேனும் தெரிந்து கொள்ள முடிவதில்லை. மண்ணில் நிற்பவனுக்கு விண்ணில் பறக்கும் விமான ஓட்டி தெரியவில்லை என்ற ஒரே காரணத்திற்காக விமானி இன்றியே விமானம் பறக்கின்றது என வாதிடலாமா? வண்டியை வேறு வாகனங்களை உள்ளிருந்து ஒருவன் செலுத்துவதனால்த்தான் அது செயற்படுவது போல நம் உடலுக்குள்ளே உள்ள உயிருக்குள்ளே இருந்துகொண்டு ஒருவன் ஒட்டும்போது, அதனை நன்கு உணர்ந்தவன் அதுவே கடவுள் என உணர்ந்தான்.

நம், புறக் கண்ணாற் காண முடியவில்லையே என்பதனாற் கடவுள் இல்லை என முடிவு கட்டிவிடலாமா? இந்த உடம்பை உள்ளிருந்து இயக்கும் உயிரை யாருமே கண்டதில்லை என்பதனால் உயிரே இல்லை என வாதிட முற்படலாமா?

உயிர் பிரியும் வேளை அருகிருக்கும், மனைவி மக்கள் உற்றார் உறவினர் வைத்தியர் எவராவது பிரியும் உயிரைக் கண்களாற் கண்டு கொள்வதுண்டா? அப்படிக்காணாமையால் உயிரே பிரியவில்லை என வாதிடலாமா? இதனால் உடலுக்குள் உயிர், உயிருக்குள் இறைவன் போலவும் பாலில் தயிர் போலவும், விறகில் தீ போலவும், இன்னும் சொல்வதானால் ரயறுக்குள், ரியூப் அந்த ரியூப்புக்குள் காற்று என்றவாறு, உடலுக்குள் உயிர் அவ் உயிருக்குள் உள்ளார்ந்து இறை இருப்பதை உணர்வதே விவேகமானதாகும்.

இதிலிருந்து எங்கெல்லாம் உடல் இருக்கின்றதோ அங்கெல்லாம் உயிர் இருப்பதையும் அந்த உயிரே சிவமாகக் கொள்ளவேண்டியது என்பதனையும் உணர்ந்தவன்தான் ஒரு இந்து இதனைப் புரட்சிக்கவி பாரதியும் தனது கவிதையில் உணர்த்தியுள்ளான்.

"உயிர்களிடத்து அன்பு வேண்டும்
தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும்"

இதனை இந்து நன்குணர்ந்தான் எல்லா உடல்களிலும் உயிர் இருப்பதால் அதைக் கொன்று மனிதன் உண்பது இறை

ஒருபோதும் நம்பிக்கையை இழந்து விடாதே.

வனையே நிந்திப்பதாகும் என அவன் கருதினான். ஆனால் வேறு சில மதங்களோ இப்படி எண்ணுவதில்லை. ஆண்டவன் படைத்தான் நம்மிடத்தே கொடுத்தான் அனுபவி ராஜா என அனுப்பி வைத்தான்.

இப்படியாக எண்ணும் மதங்கள் எங்கே? ஒரு இந்துவின் சிந்தனைதான் எங்கே? இப்படியாக அனைத்தையும் படைத்து அதனை ஆண்டருளும் தெய்வத்தை எண்ணிப் பார்ப்பது பறவைகளால், விலங்குகளால் ஊர்வனவால் முடிவதில்லை, அதற்கான பகுத்து உணரும் உணர்விலாதவையே அவை. ஆனால் பகுத்து விளங்கவல்ல ஆறாம் அறிவு கொண்ட நாம் இறை தத்துவத்தையேனும் எண்ணிப் பார்க்காது விடலாமா? கற்பனை கடந்தவனாய் கருணையே உருவமானவனாகிய இறைவனை அவன் நமக்குத் தந்த உடலை உயிரைக்கொண்டு வாழ்த்தியும் வழுத்தியும் நன்றிக்கடன் செலுத்தாமல் விடமுடியுமா?

கருணையே உருவமான கடவுள் பிரகிருதி மாயையில் இருந்து இவ் உலகைப் படைத்து இவ் அரிய உடலையும், மற்றும் கருவி கரணங்களையும் படைத்து. நாமெல்லாம் உய்த்துணர்ந்து பேரின்பப் ''பெருவாழ்வு பெற வகுத்தானே என எண்ணி எண்ணி உள்ளம் நெக்குருகி அவனைத் தொழுது பணியவேண்டும்

'சற்றே ஆழமாகச் சிந்திப்போமாயின் 'இந்த உடம்பு எப்படி வந்தது? இவ் உடம்போ அறிவில்லாதது, உயிரோ அறிவுள்ளது. எப்படி இவ் உயிர் இவ் உடலிற் புகுந்தது, இது ஏன் உடலிலே குறித்த காலம் தங்குகின்றது எப்படி, யாரால் இது பிரிகின்றது பிரிந்து பின் எங்கு செல்கின்றது என்பன சிந்திக்கச் சிந்திக்கப் பெருவியப்பாக அமைகின்றது.

ஒரு சிறு உதாரணத்தின் மூலம் இதனை விளக்க முற்படின் எருது தானாகச்சென்று வண்டியில் தலையைக் கொடுத்துத் தானாக வண்டியை இழுப்பதில்லை. அதுபோல் வண்டியும் தானாக நகர்ந்துவந்து எருதிடம் தன்னைக் கொடுப்பதில்லை இவை இப்படித் தானாகவே நிகழாமல், வண்டிக்காரனே தான் நினைத்தபோது எருதை வண்டியிற் பூட்டி, நாணயக் கயிறு என்ற பிராணவாயுவில் வண்டிக்கான கயிற்றை இணைத்துத் தானும் அவ்வண்டியில் ஏறிக் கைத்தடியால் அடித்தும் விரட்டியும், நடத்தியும், சுமைகளை ஏற்றியும் இறக்கியும், வண்டியை இயக்குவதோடு, தான் நினைத்தால் மட்டுமே தவிடும், பிண்ணாக்கும், புல்லும், வைக்கோலும் தந்து தட்டிக் கொடுக்கின்றான் இதேபோலவே அம்பலக் கூத்தனும் எம்மை ஆடவைத்தும் அசையவைத்தும் படுக்கவைத்தும் பதைபதைக்க வைத்தும்

பலவற்றை ஒன்றாக்குவது அன்பின் குணம்.

உதை தந்தும் தராமலும் இயக்கு கின்றான் இதனால்த்தான் அவனுக்கு 'இயவுள்' என்று ஒரு பெயரும் உண்டு.

...........

இப்படியானால் பின் ஏன் நாம் கடவுளை வணங்கியாக வேண்டும்? என்பது இளைஞன் தொடுக்கும் கேள்வி இறைவனைத் தொழுவதால் யாருக்கு என்ன நன்மை?

கடவுளை நாம் வணங்குவதால், கடவுளுக்கு நன்மை ஏதும் எய்தி விடாது, நன்மையெல்லாம் நமக்கே, கங்கையில் ஜமுனையில் காவேரியில் நீராடுகின்றோமே இதில் நன்மை கங்கைக்குக்கிடைத்துவிடுமா? கங்கையில் வீழ்ந்து நீந்துகின்றோம் மூழ்கி எழுகின்றோம் இதனால் கங்கை அடே அப்பா! இவனல்லவோ மனிதன் என மன நிறைவு கொள்வதுண்டா? நீராடி, பின் உடுத்தவற்றை அலம்பி காயவிட்டு, அக் கங்கையிலே எமது உடல் அழுக்கையும் உடுபுடைவை அழுக்கையும் உடம்பின் உஷ்ணத்தையும் நாமல்லவா போக்கிப் பெருநிம்மதி அடைகின்றோம்.

நாம் நீராட மறுத்தால் கங்கைக்கு என்ன கேடு வந்து விடப்போகின்றது, கங்கையில் குப்பை கூளத்தைக் கொட்டி விட்டால் யாரடா நீ! ஏனடா இப்படி வம்பு பண்ணுகிறாய் என்று கங்கை கேட்பதுண்டோ? கோபம்தான் அடைவதுண்டோ? சாபமும் போடுவதில்லையே.

அதுபோலவே பரமகருணாநிதியாகிய பரம்பொருளை அண்டி அவன் அருள் வெள்ளத்தில் முழ்கித் திளைப்போர் பேரானந்தம் பெறுவர், மாறாக இறையருளில் தம்மை அர்ப்பணிக்காதவர்கள் இறை இன்பத்தை எய்துவதரிதாகும். இறைவனுக்கு நாம் பெரும் கடனாளியாகி நிற்கின்றோம். அவனது பேருளினாலே வாழ்த்த வாயும் வழுத்த மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் பெற்றோமே என்று எண்ணி நம் அப்பர் பெருமான் வாக்கிற்கமைய நாமெல்லாம்

"நம் கடன் பணிசெய்து கிடப்பதே"

என எண்ணிச் செயற்படுவோமாக.

---

விதியால் வந்த சுகமும், விலக்க முடியாத துக்கமும் தெய்வப் பிரசாதம் என்று வணக்கத்துடன் ஏற்றுக்கொள். அறவழியினின்றும் தவறிச்செல்லாதே, தவறினால் மிகமிகப் பெரும் கேட்டை நீ அடைவாய். —ஒரு சாது—

---

# மரணப் பிரமாதம்

## நமக்கில்லையே..........

< சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் >

இப்பரந்த நிலவுலகின் கண்ணே ஏகப்பட்ட ஜீவராசிகள் பிறந்து இறந்து உழன்று கொண்டிருக்கின்றன. "ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே" என்றபடி இறைவன் ஆட்டுவிக்கின்றான். நாம் ஆடுகின்றோம். இதில் எந்தவித மாற்றமுமில்லை வாழ்க்கையின் முடிவு மரணம் என்பது அனைவரும் அறிந்த ஒன்று 'மரணப் பிரமாதம் நமக்கில்லையே' என்கின்றார் அருணகிரியார். எமது மரணத்துக்குப் பின் என்ன நிகழப்போகின்றது என்பதை யாரும் அறிவதில்லை.

விஷய ஞானம் இல்லாத இடத்தில் பயம், பீதி, ஏமாற்றம், கலக்கம் முதலிய மனக் கஷ்டங்கள் தோன்றுவது சகஜம் மரணம் என்பதை நினைக்கும் போது கூடவே பயமும் தோன்றுகின்றது. அதற்குக் காரணம் சரியான அனுபவ அறிவின்மையே.

மரணம் என்பது உயிரைப் பொறுத்தளவில் புதிய சக்தியும் உற்சாகமும் புது ஆற்றல் திறமைகளும் உயிரில் உருவாகின்ற ஒரு புனிதமான நிகழ்ச்சி.

பகல் முழுவதும் உழைத்துக் களைப்புற்றவர்களுக்கு இரவு உறக்கம் களை தீர்த்துப் புத்துணர்வும் தெம்பும் அளிப்பது போன்று, வாழ் நாள் முழுவதும் பல துறைகளிலும் செயலாற்றி வாழ்விலே களைப்படைந்த மனிதர்களுடைய ஜீவன் சுயமாகவே கொள்ளும் ஓய்வுதான் மரணம்.

பழுதடைந்த ஆடையை மாற்றிவிட்டுப் புதிய ஆடை அணியும் போது எமக்கு ஒரு மகிழ்ச்சி உண்டல்லவா? அதே போலத்தான் பழுதடைந்த சரீரத்தை மாற்றி வேறு புது உடம்பை எடுக்கும் போது ஜீவனும் களிப்படைகின்றது. ஆகவே மரணத்தைக் கண்டு கலங்கக் கூடாது. இறைவன் விதித்தவண்ணம் வாழ்வு நடைபெறுகின்றது என்று புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

மனிதன் எப்போதும் சந்தோஷமாகவே வாழ்வதற்கு

அன்பும், சிறப்பும் இல்லையேல் மகிழ்ச்சியில்லை.

விருப்பங் கொள்ளுகின்றான். காலையில் மங்களகரமாக விளக் கேற்றி இறைவழிபாட்டுடன் தனது கருமங்களை ஆரம்பிக் கின்றான். " அரிது அரிது மானு டராய்ப் பிறத்தல் அரிது " என்ற ஔவையார் கூற்றுப்படி கிடைத்தற்கரிய மானுடஜென் மம் மிகவும் புனிதமானது. அதன் மகிமையை உணர்ந்து செயற்பட வேண்டியது மனித னின் கடமை. லௌகீக மாயை யில் அகப்பட்டு " நான், எனது, என்னுடையது " என்று நினைத் துக் கொண்டு வாழ்க்கையிலே கபடத்தைச் செயற்படுத்துகின் றான். இது முற்றிலும் தவறா னது. " தன்வினை தன்னைச் சுடும் " என்பதை முதலில் உணர்ந்து வாழத் தலைப்பட வேண்டும். வாழ்த்த வாயும் நினைக்கமட நெஞ்சும் தாழ்த் தச் சென்னியும் தந்த தலை வனை ஏத்தித்துதிப்பதே நமது தலையாய கடமை. அதை விடுத்து மாயை வலையிலகப் பட்டுப் பிறவியின் மகத்துவத் தைக் கெடுக்கக் கூடாது. "பிற ருக்கு உதவி செய்யப் பிறந்த நீ உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவமாவது செய்யாதிரு " என்கிறார் ஸ்ரீராமகிருஷ்ணர். மனிதன் கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பதை நினைவிற் கொண்டு ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதையும் நினைவில் நிறுத்த வேண்டும்.

பரிசுத்தமான இருதயத்திலி ருந்து தான் களங்கமற்ற, பெரும் சுகத்தைத் தரும் தெய்வீக அமிர் தக் கசிவு ஊற்றெடுக்கின்றது. அந்த அமிர்தக் கசிவில் ஒரு சிறு துளிதானும் ஒரு முறை உட் கொள்ள முடியுமேயானால் அவ னுடைய வாழ்க்கைச் சேற்றில் முளைத்த வெண்டாமரை போல் அருள்மழை பொழிந்து மலரும். முத்துச்சிப்பியில் விழும் ஒரு சிறு மழைத்துளி விலை மதிக்கமுடி யாத ஒரு முத்தை உருவாக்குவது போன்று ஒழுங்கான ஒரு சிறு ஆத்மீகப் பயிற்சி ஒருவனைக் கடைத்தேறச் செய்யப் போது மானது.

பிறப்பு என்று நிகழ்ந்ததோ அன்றே இறப்பும் வருமென்பது நிச்சயம். ஆகவே, இறப்பு ஆன் மாவுக்கு விடுதலை. புதிய உத் வேகத்துடன் தன் வாழ்க்கைப் பயணத்தை ஆன்மா ஆரம்பிக் கும். சந்தோஷமாக வழியனுப்பி வைக்கவேண்டும். ஆசையும் பாச மும் பற்றும் கவலையை வர வழைக்கின்றன. " ஆசையறாய், பாசம் விடாய், ஆன சிவபூசை பண்ணாய், நேசமுடன் ஐந் தெழுத்தை நீ நினையாய் " என் பதுபோல் ஆசையே பிறவிக்குக் காரணம்.

" ஆசை அறுமின் ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசை அறுமின் " என்று ஆசை யின் கெடுதியை நமக்குணர்த்தி யுள்ளனர் நமது முன்னோர்கள், ' நிலை பெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீ வா ' என்று அழைக்

கின்றார் அப்பரடிகள். நிலையான பேரின்பத்தைப் பெற வேண்டுமாயின் திருத்தொண்டு செய்வதைவிட வேறு வழியில்லை. இறைவனுக்குத் தொண்டு செய்வதன் மூலம் ஆன்ம ஈடேற்றம் பெறலாம்.

ஒவ்வொரு நாளும் ஆண்டவன் கோயில் கொண்டெழுந்தருளிவீற்றிருக்கும் ஆலயத்தைச் சென்று அடைந்து, கூட்டித் துப்புரவு செய்து நீர் தெளித்து, பூமாலைகள் கட்டிக்கொடுத்து, தேவார திருவாசக பாராயணஞ் செய்து கூட்டு வழிபாடாற்றுவதன் மூலம் இறைவனை அடையலாம். ''அவனருளாலே அவன் றாள் வணங்கி'' என்பது சிவ புராணம். நாங்கள் இந்த மனிதப் பிறவி எடுத்ததே சிவபெருமானைப் பணிந்து திருத்தொண்டு செய்வதற்கேயாம். ஆகவே, மரண பயத்தினின்றும் நீங்கி, சரணத்தை அடைவதற்குச் சிவ தொண்டுசெய்வதே சிறந்தவழி. அதுவும் நாம் நினைத்தவுடன் செய்துவிட முடியாது. அதற்கும் அவனருள் வேண்டும்.

ஆகவே, ''பெறுதற்கரிய மானுடப்பிறவி'' எடுத்த நாம் இனிமேலாவது, பாவத்தைச் செய்யாமல், புண்ணியத்தைச் செய்து வீட்டின்பம் பெறுதற்கு வழிகோலுவோமாக.

## தவிப்பு

''இறைவனைக் காண வேண்டும் இறைவனைக் காண வேண்டும்'' என்று அடிக்கடி ஒரு மனிதன் ஒரு துறவியை வந்து தொந்தரவு செய்தானாம் ''உனக்கு இறைவனைக் காண்பதில் அவ்வளவு விருப்பமா?'' என்று துறவி கேட்டார். ''ஆம்'' என்றான் வந்தவன் அவனைத் துறவி ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்றார் நீரில் மூழ்கச் சொன்னார். அவனும் மூழ்கினான். சட்டென்று அவன் தலையை நீரினுள் நன்கு அமிழ்த்தினார். அவன் திமிறித்திமிறிப் போராடி தலையை மேலே உயர்த்தினான்.

''சுவாமி நீங்கள் செய்தது என்ன'', என்று கேட்டான்.

பதிலாக துறவி அமைதியாகக் கேட்டார். ''நான் உன்னை நீரில் அமிழ்த்திய போது நீ என்ன நினைத்தாய்'' எப்படியாவது உங்களை உதறிவிட்டு மூச்சுவாங்கத் தவித்தேன்''

''அந்தத் தவிப்பு இறைவனைக் காண வேண்டுமென்று உன்னிடம் ஏற்பட்டால் நிச்சயம் இறைவனைக் காண்பாய்!'' என்றார் துறவி.

இறையருளிற்கு எப்போதும் பஞ்சமில்லை.

# அறநெறி கூறும் திருக்குறள்

< செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் >

எல்லாப் பொருளும் இதன்பாலுள இதன்பால்
இல்லாத எப்பொருளு மில்லையால் - சொல்லாற்
பரந்தபா வாலென் பயன் வள்ளுவனார்
சுரந்தபா வையத் துணை.

— மதுரைத் தமிழ் நாயகனார்



உலகம் உய்வதற்கு எழுந்த ஒப்பற்ற திருநூல் திருக்குறள். உலகப் பொதுமறையாக அனைவரும் ஏற்றுத் தத்தம் மொழிகளில் மொழி பெயர்த்துக் கொண்ட பெருமை வாய்ந்த அறநூல். இந்நூலினைத் தந்த திருவள்ளுவரின் பெருமை சொல்ல வந்த பாரதியார்

''வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடுஎன்று போற்றுகிறார்

திருக்குறள் மனிதன் மனிதனாக வாழ்வதற்கு வழிகாட்டும் அற்புத நூல். அறநெறியே ஆன்மீகத் திருநெறி. உலகம் அமைதி பெறுவதற்கு ஒவ்வொரு மனிதனும் அறநெறியில் வாழ முனைய வேண்டும். இன்றைய உலகில் நீதியை மீறி அநீதி நெறியில் வாழ்பவர்கள் பலர் உளர். அறநெறியே உண்மை நெறி என்பதனை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழர் வாழ்வுக்குத் திருக்குறள் வாயிலாக அரண் அமைத்துக் கொடுத்தவர் வள்ளுவப் பெருந்தகை தமிழரின் தலைமைச் சான்றோனாக மதிக்கும் பெருமைக்குரிய வள்ளுவரின் திருக்குறள் இவ்வையகத்திற் சூரியன், சந்திரன் நிலைக்கும் வரை அறம் கூறும் அரிய நூலாக விளங்கும் என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

உலகிற் பிறவி எடுத்த உயிர்கள் அனைத்தும் இன்பநாட்டமுடையவை. இன்பம் இம்மை

இன்பம், மறுமை இன்பம் பேரின்பம் என மூவகைப்படும். உயிர்கள் அறம், பொருள், இன்பம் என்ற நிலைகளை அனுதினமும் சந்தித்து இறுதி நிலையாகிய பிறவா நிலையை அடையவேண்டும் என்பது அறநூல் கூறும் வாழ்வியல் மரபாகும். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற வகைப்படுத்தலில் 1330 குறள்களில் திருக்குறள் அறநெறிதனை விளக்கி நிற்கிறது

திருவள்ளுவர் இவ்வுலகினுக்கு வழங்கிய திருக்குறளில் அறத்துப்பால் ஆரம்பப்பகுதியாக அமைந்துள்ளது.

அறத்துப்பாலில் முதல் அதிகாரமாகக் கடவுள் வாழ்த்தினை எடுத்துரைத்துள்ளார். திருக்குறள் முழுமைக்குமுயிர் நாடியாயுள்ளது. "கடவுள் வாழ்த்து" என்னும் முதலதிகாரமே. கடவுள் வாழ்த்தாவது கடவுளை வாழ்த்துவதோடு கடவுளை வணங்காதவர் பிறவியைக் கடக்கார் என எச்சரிக்கையோடு அறம் கூறும் அற்புத அதிகாரமாக அமைந்துள்ளது. கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் முதலாவது குறள் பின்வருமாறு அமைந்துள்ளது.

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

இக்குறளை விரித்துரைத்தவர்களில் பரிமேலழகர் கூறும் கருத்துரையாவது எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலை யுடையன. அதுபோல் உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து " என்று குறிப்பிடுகிறார். மேலும் மணக்குடவர் உரை கூறுகையில் எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய எழுத்தைத் தமக்கு முதலாக உடையன; அவ்வண்ணமே உலகம் ஆதியாகிய பகவனைத் தனக்கு முதலாக வுடைத்து எனக் குறிப்பிடுகிறார். இவ்வுலகுக்கு நிமித்த காரணனாக இருக்கும் இறைவன் பெருமைதனை முதலாவது குறளிலேயே அகலச் சிந்திக்க வைத்துள்ள வள்ளுவனார் அனைத்துக்கும் நிமித்த காரணனான இறைவனால் உருவான ஓசை, ஊறு, ஒளி, சுவை, கந்தம் என்கின்ற நுண்பூதமும், வான், வளி, தீ, நீர், நிலம் என்கிற ஐம்பெரும் பூதமும், பஞ்சபூதங்களால் உருவான பல்லுயிர்களும், உயிர்கள் வாழும் உலகும் தோன்றக் காரணமானவன் இறைவன் என்ற அகலப்பொருளை உள்ளடக்குகின்ற வகையில் வள்ளுவப் பெருமான் முதலாவது குறளைப் படைத்துள்ளார்.

இரண்டாவது குறளில் அறிவு என்பது இறைவனை அடையச் செய்வது என்ற வகை

யில் தூய அறிவு வடிவான, நன்மை தரும் திருவடிகளைத் தொழாதவர் என்றால் அவர் கற்றதனால் உண்டான பயன் யாதுமில்லை என்ற பொருள் அமையப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

குறிப்பாகக் கல்வியின் குறிக்கோள் பற்றிய சிந்தனைகளைக் கீழைத்தேய அறிவியலாளர்களும் மேலைத்தேய அறிவியலாளர்களும் பல்வேறு விதமாக எடுத்துரைத்துள்ளார்கள். எனினும் வள்ளுவர் மிகச் சுருக்கமாக — கற்றவர் என்பவர் கடவுளை உணர்பவர்களாக இருத்தல் வேண்டும் என்ற குறிப்பால் உணர்த்தியுள்ளார்.

மூன்றாவது குறளில் இறைவன் திருவடிகளை நெஞ்சில் இருத்தி வாழ்பவர்களே உலகில் நிலையாக வாழ்வார்கள் எனக் குறிப்பிடுகிறார்.

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

மேற்குறித்தகுறளுக்கு உரை சொன்ன பரிமேலழகர் மலரின் கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட திருவடிகளைச் சேர்ந்தார் எல்லாவுலகிற்கும் மேலாய வீட்டுலகின் கண் அழிவின்றி வாழ்வர் எனக் குறிப்பிடுகிறார். இங்கே நிலம் எனக் கூறியது இவ்வுலகின் கண்ணும் மேலுலகின் கண்ணும் எனக் கொள்ளப்பட வேண்டும்என மணக்குடவர் தம் உரையிற் குறிப்பிடுகிறார்.

நான்காவது குறளில் விருப்பும் வெறுப்பும் இல்லாதவனாகிய இறைவனின் திருவடிகளைச் சேர்ந்தவர்களுக்கு எவ்விடத்திலும் எக்காலத்திலும் துன்பம் இல்லை என்ற பொருளை உணர்த்தும் வகையிற் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

4. வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

அறியாமையால் நல்வினை செய்யப் பிறந்தவர்கள் தீவினை செய்து அவல வாழ்வினுக்குள் அகப்படுகிறார்கள். விருப்பு, வெறுப்பில்லாத இறைவனோடு தொடர்புற்றவர்கள் பாவங்க

ளைச் சம்பாதிக்கமாட்டார்கள். நாம் யார்மீது பற்றுக் கொள்கிறோமோ அவர்களது இயல்பு எம்மையும் வந்துசேரும் என்பது இயற்கை. இவ்வகையில் இன்ப, துன்பங்களுக்கு அப்பாற்பட்ட இறைவனோடு மிகுந்த தொடர்புடையவர்களுக்கு எந்நாளும் இன்ப, துன்பங்கள் நெருங்கா என்ற கருத்தினை இக்குறள் வாயிலாக நாம் உணரலாம்.

ஐந்தாவது குறள் இறைவனின் மெய்ம்மையோடு சேர்ந்த புகழையே விரும்பினவரிடத்து அறியாமை என்னும் இருளைச் சார்ந்த இருவகை வினைகளும் வந்து சேரா என்ற பொருளிற் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

5. இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

அறிவில்லாதவர்கள் கூறுகின்ற புகழ்கள் பொருள் இல்லாதவை. இறைவன் புகழே பொருள்சேர் புகழ் என்ற கருத்தின் அடிப்படையிலேயே இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பினாரிடத்து அறியாமையால் வரும் மயக்கம் உருவாகாது. இவர்களிடையே நல்வினை தீவினை என்னும் இரண்டும் அணுகா என்பதை இக் குறள் வாயிலாக உணரவைக்கிறார். இக்குறளுக்கு மேலும் உரை சொன்ன தாமத்தர் என்பார்; அஞ்ஞானத்தாலுண்டாகும் நல்வினை, தீவினை என்னும் இரண்டு வினைகளும் மெய்த் தன்மை பொருந்திய கடவுளுடைய புகழை விரும்பித் தோத்திரம் பண்ணினாரிடத்து சேரமாட்டா என்று சிறப்பித்து குறிப்பிடுகிறார்.

[ தொடரும்.....

---

பிழையாகவே நினைத்துப் பிழையாகவே அனுமானமும் செய்து பிழையாகவே பேசுகிறவர்கள் பத்துப்பேர் ஒன்று சேர்ந்து விட்டால் அப்புறம் சொர்க்கத்தைக்கூட நரகமாக மாற்றி விடுவார்கள். அதைத்தெரிந்து கொண்டு ஒருவர்க் கொருவர் அளவாகப் பழகவேண்டும். அப்படிப் பழகும் போது அவர்கள் உறவு நீடித்து நிலைக்கும்.

அத்தியாயம் - 36

## மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# சிசுபாலன் வதம்

< சிவத்திரு. வ. குமாரசாமிஐயர் >

மன்னர்களைத் தூண்டிவிட்டுக் கலகம் செய்த சிசுபாலன் பீஷ்மரையும் கண்ணனையும் மேலும் மேலும் இழிந்த சொற்களால் வைதான். இதனாற் குழப்பமடைந்த மன்னர்களும் மனவேறுபாடு கொண்டவராய்க் கலகம் செய்ய முயன்றனர். சூழ்நிலையின் போக்கை உணர்ந்து கவலை கொண்ட யுதிஷ்டிரர் பீஷ்மரை வேண்டி "பெரியீர் இச்சந்தர்ப்பத்தில் நாங்கள் யாது செய்யவேண்டும்? எமக்கு வழிகாட்டும்" என்று இறைஞ்சி நின்றார். அப்பொழுது பீஷ்மர் "யுதிஷ்டிரா எதற்கும் அஞ்சாதே! சிசுபாலன் பொறாமையால் இவ்வாறு எல்லோரையும் இகழ்ந்து துன்பப்படுத்துகிறான். கண்ணன் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருக்கிறார். கண்ணபிரானை நிந்தனை செய்து எதிர்ப்பவர்கள் நிச்சயம் மரணமடைவர். சிசுபாலனின் பொறாமைக் குணத்தால் அவன் பக்கம் சார்ந்தவர்கள் துன்பப்பட்டு மடியப் போகிறார்கள் கவலைப்படாதே!" என்று ஆறுதல் வார்த்தைகளைக் கூறினார். இதனைக்கேட்ட சிசுபாலன் மேலும் கோபம் அடைந்தவனாய்ப் பீஷ்மரை நோக்கி "நீ கண்ணனைப் புகழ்வதையே தொழிலாகக் கொண்டுள்ளாய். கண்ணனை நீங்கள் பூசியுங்கள் ஆனால் எனக்குக் கண்ணன் ஒரு பொருட்டல்லன் பெண்ணைக் கொன்றவனைப் பெரும் வீரன் என்று நீங்கள் கொண்டாடுங்கள். ஆனால் நான் அவனை ஒரு துரும்பாகவே மதிக்கிறேன்" என்றான். கண்ணபிரானை இகழ்ந்து பேசியதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத பீமன் கோபாவேசமுற்றவனாய் இருக்கையினின்றும் துள்ளி எழுந்தான். அவனைச் சாந்தப்படுத்தி அமரச்

செய்த பீஷ்மர் "சிசுபாலா! நாங்கள் கண்ணனை வணங்கத் தான் செய்வோம். இதனைப் பொறுக்க முடியாத நீயாயினும் யாராயினும் கண்ணனுடன் போர்புரிய வாருங்கள். ஆனால் கண்ணபிரானின் திருக்கரத்தால் நீங்கள் மடிவது திண்ணம்" என்று கூறலானார். இவ்வுரைகளைச் செவிமடுத்த சிசுபாலன் "உன்னையும் கண்ணனையும், பாண்டவர்களையும் இப்பொழுதே அழிப்பேன்" என்று கூறி ஆர்ப்பரித்தவனாய்ச் சபையினின்றும் வெளியேறினான்.

கண்ணபிரான் உடனே தனது கதையையும் சக்கராயுதத்தையும் கையிற்றாங்கியவராய்ச் சிசுபாலனை எதிர்க்க ஆயத்தமானார். மன்னர் சிலர் கண்ணனுக்கு உதவுவதாக முன் வந்தனர். அவர்களை வரவேண்டாம் என்று மறுத்துரைத்த கண்ணபிரான் அவையினரை நோக்கி, "மன்னர்களே! இவன் என் அத்தை மகனாய் இருந்தும் எம் விரோதியாக இருக்கிறான். இவன் மிகவும் இழிந்தவன். யாதவர்களையும் பெண்களையும் அவமதிப்பவன். இவனைக் கொல்லாது விடுவது இனித் தகாது. இதுவே தக்கதருணம்" என்று கூறி யுத்தம் புரியத் தொடங்கினார். கண்ணனின் உரைகளால் மற்றைய மன்னர்கள் வாளாவிருந்தனர். சிசுபாலன் மட்டும் கண்ணனுடன் யுத்தம் புரியலானான். மிகவும் வீரனான சிசுபாலன் கண்ணனுடன் சமமாகப் போரிட்டான். கண்ணபிரான் முடிவில், சக்கராயுதத்தைச் செலுத்தி அவனைக் கொன்றார். சிசுபாலன் இவ்விதம் மரணமடைந்ததைக் கண்ட யுதிஷ்டிரர் பெருங் கவலை கொண்டார். மன்னர்கள் மகிழ்ந்து ஆர்ப்பரித்தனர் சிலர். சிலர் அமைதியாகவிருந்தனர். யுதிஷ்டிரர் தக்க முறைப்படி சிசுபாலனின் இறுதிக் கடன்களை அவனின் மைந்தனைக் கொண்டு செய்வித்தார்.

வேள்வி தொடர்ந்து சிறப்பாக நடைபெற்றது. வேள்வி முடிவில் அந்தணர்கள் எல்லோருக்கும் சிறந்த வகையிற் தானங்களை வழங்கி அவர்களை மகிழ்வித்தனர் பாண்டவர். மன்னர்களையும் தக்கமுறையிற் கௌரவித்தனர். இவ்வாறு யாகம் நிறைவேறியது. யாகத்துக்கு வருகை தந்திருந்த எல்லோரும் விடைகொண்டனர் கண்ணபிரானுக்கும் பிரியாவிடை அளித்துப் பிரிய மனமின்றி அவரை வழியனுப்பி வைத்தனர் பாண்டவர். இந்திரப் பிரஸ்தத்தில் வியாசமகரிஷியும் துரியோதனனாதியோர் மட்டும் தங்கி இருந்தனர். வியாசமகரிஷி தாம் தபோவனத்துக்குச் செல்ல வேண்டும் என்று தருமரிடம் உரைத்தார். அப்போது தருமர் அவரை வணங்கி, "சுவாமி இனிவருங்காலம் சிசுபாலன் வதம் போன்ற செயல்கள் ஏதும் இல்லாது அமைதி

யாகச் செல்லவேண்டும். இனியும் ஏதாவது விரும்பத்தகாத செயல்கள் நடக்க இருக்கிறதா? அப்படி ஏதும் நடக்காமல் எம்மைத் தாங்கள் தான் ஆசீர்வதித்துக் காக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். அப்போது வியாசர் ''புதல்வ! தர்மசிந்தையுள்ள நீ கேடுகளைத் தாங்கும் மனோவலியைப் பெற வேண்டும் சிசுபாலனின் மரணம் உன்னை மிகவும் வருத்துகிறது. ஆனாலும் இனிவரும் காலங்களிலும் பற்பல கேடுகள் வரக் கூடும். அதற்கும் நீ காரணமாக, விளங்குவாய். நீ தர்மசிந்தையுடன் நடந்து வரும் கேடுகளுக்குக் காரணமாகாமல் இருக்க முயற்சிசெய். பொறுமையுடன் புலனடக்கத்துடன் அரசாள்வாயாக. முடிவில் வெற்றியே கிட்டும் தர்மம் ஒருபோதும் அழிவதில்லை'' என்று யுதிஷ்டிரர் மனத்தை அமைதிப்படுத்தி, ஆசீர்வதித்துவிட்டுத் தபோவனம் நோக்கிச் சென்றார்.

## அழிவுக்கு வித்து

துரியோதனனாதியோர் இந்திரப்பிரஸ்தத்திலே இன்னும் பல நாட்கள் தங்கினர். அந்நகரின் அழகையும் சிறப்பையும் கண்டு களிப்புற்றனர். யுதிஷ்டிரரின் மணி மண்டபங்களையும், சிற்ப, சித்திரங்களையும் ரசனையுடன் பார்த்து மகிழ்ந்தனர். அவ்வேளையில் தான் ''விதி'' எனும் வெங்கொடுமை அவனையும், ஏன் பாண்டவர் அனைவரையும் தன் வலிய கரங்களினால் இறுகப்பற்றிப், படாத துயர்கள் அனைத்தையும் படவைக்கச் சித்தம் செய்தது. மணிமண்டபத்தைக் காண வந்த வேளையில் துரியோதனன் பளிங்குத் தரையில் நீர் இருப்பது போன்று பிரமை அடைந்தவனாய் தனது ஆடையைத்தூக்கி நடந்தான். கதவு இருப்பதாக நினைத்துக் கதவு இல்லாத இடத்தைத்திறக்க முற்பட்டான். கதவு உள்ள இடத்தில் இல்லையென்று எண்ணிமோதிக்கொண்டான். இத்தகைய செயல்களினால் அவன் குழம்பித் தவித்ததைக் கண்ணுற்ற அனைவரும் நகைத்தனர். பாண்டவர்களுடன் சேர்ந்து திரௌபதியும் நகைத்தாள்.. சிறப்புக்களையும் செல்வங்களையும் கண்டு மனம் புழுங்கியவாறு இருந்த துரியோதனனுக்கு அவர்களின் நகைப்பானது பெரும் அவமானத்தையும் ஏற்படுத்தியது. முடிவில் விடைபெற்று அஸ்தினாபுரம் செல்ல ஆயத்தமானான்.

அரண்மனையை அடைந்ததும், மிக்க சோர்வும் கவலையும் கொண்டவனாய்த் தனது நாட்களைக் கழித்தான். இதனைக் கண்ணுற்ற சகுனி துரியோதனனிடம் அதன் காரணம் யாது என வினாவினான். அப்போது துரியோதனன் ''மாமா, இந்திரப்பிரஸ்தத்திலிருந்து வந்ததிலிருந்து எனது மனம் சோர்வடைந்து விட்டது, பாண்ட

பணம் வருமுன் செலவுகளை உண்டாக்காதே.

வர்கட்குக் இடைத்திருக்கும் சிறப்புக்களைப் பார்த்தீர்களா? அவர்கள் எவ்வளவு மேன்மை அடைந்து விட்டார்கள், அவர்களை நான் எத்தனை முறை முயன்றும் என்னால் அழிக்க முடியவில்லை. அதுவே எனது கவலை'' என்று சொன்னான். அப்போது சகுனி, தன்னிடம் ஒரு அரியதிட்டம் இருப்பதாகக் கூறினான்.

'' நாசகாலவிபரீத புத்தி'' என்று பெரியோர்கள் சொல்லி வைத்ததற்கமையத் துரியோதனின் மனத்தில் மூண்டிருந்த பொறாமை எனும் பெருந்தீய குணம் அவனை நிம்மதி இழக்கச்செய்து. சோர்வடையச் செய்து விட்டது. அடுத்தவர் வாழ்வின் உயர்வில், முன்னேற்றத்திற் பொறாமைப் படுதல் என்பது எத்தனை இழிசெயல் என்பது அவன் உள்ளத்திற் பதியவில்லை. அதனை மேலும் வளர்ப்பதற்கான யோசனைகளையே சகுனி சொல்லப் போனான். எனவே, பொறாமை கொண்டு முடிவில் துரியோதனன் அடையும் துயரநிலையை நாம் தெளிவாக உணர்ந்திருக்கிறோம். அவ்வாறிருந்தும் பொறாமை எனும் கொடிய குணம் இன்னும் மனித உள்ளங்களில் நிலைபெற்றிருப்பது ஏன்? புராணங்கள், இதிகாசங்கள் அறிவுறுத்தும் அறிவுரைகளைப் படிக்கும் போதுமட்டும் சிலாகித்துப் பேசுவதும், அதனை வாழ்வில் நடைமுறைப்படுத்தாமையுமே முக்கிய காரணமாகும். எம்மையே நாம் ஆராயவேண்டும். எம் செய்ல்கள் நல்லஉணர்வுடன் செயற்ப்படுத்தப்படுகின்றனவா? என்று சிந்திக்க வேண்டும். சுயபரிசீலனை என்பது மிகமிக முக்கியம். இத்தீய குணங்கள் மனிதரிற்காணப்படுவது இயல்பே. ஆனால் அதனைச் சுயசிந்தனையால் தெளிவுபடுத்தித் தீய குணங்களைச் செயலற்றுப் போகச் செய்தல் வேண்டும். புராண இதிகாசங்களைக் கற்பதன் நோக்கம் அதுவாகப் பலன் அடைய வேண்டும். பொறாமை கொண்ட ஒருவன் உயர்நிலை அடையமாட்டான். என்பதனைத் தெட்டத் தெளிவாக அறிந்திருந்தும் அக்குணத்தை வளர்த்துக் கொள்வதில் இலாபம் என்ன?

[தொடரும்....

---

இது இப்படித்தான் நடக்கும், இப்படித்தான் நடக்க முடியும் என்று எந்த முயற்சியும் நீ ஆசைப்படுகிறபடியே முடிய வேண்டும் என்பதாகச் செயலை மறந்து விளைவை மட்டும் எண்ணிக் கற்பனைகளை வளர்க்காதே. அது வேறு விதமாக நடந்தாலும் தாங்கிக் கொள்ளத் தயாராக இரு. கீழே விழுவது மீண்டும் எழுவதற்காகவே.

---

மற்றவரை மகிழ்வித்தால் நீ மகிழ்ச்சியடைவாய்

# யாக்கை நிலையாமை

( செல்வி மாலினி குணரத்தினம் )

பரந்து விரிந்த இப் புவனமானது நடராஜரின் பஞ்சகிருத்திய அனுக்கிரகத்தினால் நியமங்கள் மாறாமல் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இதிற் பிறவி எடுத்த ஆன்மாக்கள் நிலையற்ற உடலங்களுக்குட் புகுந்து தமது பாவவினைக்கேற்பச் சுற்றிச் சுழல்கின்றன. இவற்றை நன்கு உணர்ந்திருந்தும் எம்மிற்பலர் நிலையற்ற இப்பிறவியை நிலையானதென நினைந்து வாழ் நாளை வீணே கழிக்கின்றனர். எமது சமயப் பெரியோர்களும், இதிகாச புராணங்களும், திருமுறைப் பாடல்களும், நீதி நூல்களும் காலந்தோறும் யாக்கை நிலையாமை பற்றி விபரித்து இறைவனை அடையும் மார்க்கத்தினையும் செப்பி நிற்கின்றன.

அந்தவகையில் இவ்வுலக வாழ்வில் உறவுகள் நிலையானவையல்ல இறைவனின் பாத கமலங்களை வணங்கி உய்யும் வாழ்வே நிலையானதாகும் என்பதை

" தந்தையார் போயினார் தாயாரும்
போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்த நாள் வாழ்வதற்கே மனம்வைத்
தியால் ஏழை நெஞ்சே
அந்தணனாரூர் தொழு துய்யலாம்
மையல் கொண்டஞ்சல் நெஞ்சே, "

என்ற திருமுறைப் பாசுரம் விளக்கி நிற்கின்றது. யாக்கை நிலையாமை பற்றி மணிமே கலை எனும் நூல் சாக்காடு எனும் பகுதியிலே

" சாக்கா டென்பது அருவுருத் தன்மை
யாக்கை வீழ்கதிரென மறைந்திடுதல் "

அதாவது சாக்காடு என்று சொல்லப்படுவது அருவாகவும் உருவாகவும் ஆகிய தன்மையினை உடைய உடலானது

ஆபத்திலே சிநேகிதனை அறி.

மேற்றிசைக்கண் மறைகின்ற ஞாயிற்றைப் போலச் சென்று மறைந்து போதல் ஆகும் எனக் குறிப்பிடுகின்றது.

உலகம் போற்றும் உத்தம நூலாகிய திருக்குறள்

"குடம்பை தனித்துஒழியப் புட்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு"

உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு தான்இருந்த கூடுதனியே இருக்க அதைவிட்டு வேறிடத் திற்குப் பறவை பறந்தாற் போன்றது என்றும்

"உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

அதாவது இறப்பு எனப்படு வது ஒருவனுக்கு உறக்கம் வருதலைப் போன்றது. பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக்கொள்வதைப் போன்றது எனப் பலவாறாக யாக்கை நிலையாமையைப் பற்றிச் செந் நாப்போதார் குறிப்பிடுகின்றார்.

இன்னும் இருபதாம் நூற்றாண்டின் புரட்சிக்கவிஞர் பாரதியார்

"உலகெலாம் ஒரு பெருங்கனவு அஃதுளே
உண்டு உறங்கி இடர்செய்து செத்திடும்
கலக்க மானுடப் பூச்சிகள் வாழ்க்கையோர்
கனவினும் கனவாகும்."

என யாக்கை நிலையாமையை எடுத்தியம்புகின்றார். இதே போன்றே கவிமணிதேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் உமர்கையாம் பாடல்கள் ஒன்றிலே

"மண்ணிற் செய்த கலமுடையின்
மண்ணில் மண்ணாய்ப் போகுமென
எண்ணி முன்னாள் அக்குயவன்
எனையும் மண்ணில் வனைந்தனனால்!
உண்மை இதனை உள்ளத்தில்
ஊன்றி உணரா மாந்தரெல்லாம்
வெண்மை பேசித் திரிபவரே;
வீணாய் வாதம் செய்பவரே!"

இனிய சொற்கள் வலிமை நெஞ்சை உருகவைக்கும்.

இங்ஙனமாகத் தமது யாக்கை நிலையாமையை உணராத மாந்தரைப்பற்றிக் கூறுகின்றார். இதனையே நடிப்புச் சுதேசிகளிலே பாரதியாரும்

"மானம் சிறிதென் றெண்ணி
வாழ்வு பெரிதென் றெண்ணும்
ஈனர்க் குலகந்தனில் - கிளியே
இருக்க நிலைமையுண்டோ?"

என வலியுறுத்தி வினவுகின்றார். நாலடியார் யாக்கை நிலையாமை பற்றிக் குறிப்பிடும் பொழுது

"கணம் கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணம் கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும் மணங்
கொண்டீண்டு
உண்டுண்டுண் டென்னும் உணர்வினாற் சாற்றுமே
டொண் டொண்டொ டென்னும் பறை"

அதாவது கூட்டமாகக் கூடி உறவினர் கூவிஅழ, பிணத்தைத் தூக்கிக்கொண்டு சுடுகாட்டில் இடுபவரைப் பார்த்தும், திருமணம்செய்துகொண்டு, இவ் உலகில் நிச்சயமாய் இன்பம் உண்டு இன்பம் உண்டு என்று மயங்குபவனுக்கு "டொண்டொண்" என ஒலிக்கும் சாப்பறையானது இவ்வுலக வாழ்க்கையில் இத்தகைய இன்பம் இல்லை என்னும் உண்மையை உரைக்கும் என்கிறார். இதனையே திருமூலரும் தனது திருமந்திரத்தில்,

"ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணம் என்றுபேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச்சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே."

என்கிறார். நிலையற்ற இப் பிறவிகளை விடுத்து இறைவன் தாளினை சரணடைதலே பேரின்பம் என்பதனை மணிவாசகர்

"...இத்தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்
தேன் எம்பெருமான் மெய்யே
உன் பொன்னடிகள் கண்டின்று
வீடுற்றேன்....."

என்கிறார். இக்கருத்தைப் பிரதிபலித்தே பட்டினத்துப்பிள்ளையார் எந்நேரமும் சிவனை வணங்குங்கள் அதுவே சுகம் என இயம்பி நிற்கின்றார்.

செல்வங்களைவிட செல்வாக்கு மேலானது.

"விட்டுவிடப் போகுது உயிர் விட்ட உடனே உடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் – பட்டதுபட்டு
எந்நேர மும்சிவனை ஏத்துங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம் "

துக்கங்களுக் கெல்லாம் மூல காரணம் பிறவிதான். இனிப் பிறக்காவிட்டால் கவலையே இல்லை. பணம் வேண்டுமென்றாற் பணக்காரனிடம் போவது போலப் பிறப்பு வேண்டாமென்றாற் பிறப்பில்லாதவனிடம் தான் போகவேண்டும் எனக் காஞ்சிகாமகோடி குறிப்பிட்டுள்ளார்.

இதனை மனத்தில் வைத்தே காரைக்காலம்மையார் நிலையற்ற யாக்கையைத் துறந்து பிறவாமை வேண்டுமெனக் கேட்ட தோடல்லாமல் அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க வேண்டுமெனவும் கேட்டு பேரின்பப் பெருவாழ்வு பெற்றார்.

"இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்மீண்டும் பிறப்புண்டேல் உன்னை
- யென்றும்
மறவாமை வேண்டும்இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவாநீஆடும் போதுன் அடியின் கீழிருக்க என்றார்."

இவ்வாறாக நீர்க்குமிழி போன்ற நிலையற்ற யாக்கையின் பற்று அறுத்து நிலையான பேரின்பத்தை அடைய வேண்டுமெனின் பற்றற்ற இறைவனின் பாதகமலங்களைப் பக்தியுடன் பற்றிப் பிறவிப்பிணியை நீக்க வேண்டும்.

சுபம்

---

இறைவனைப்பற்றிச் சொல்வதற்கு மனிதனுக்கு என்ன ஆற்றல் இருக்கிறது? உண்மையில் இறைவனே மக்கள் தன்னை அறிந்துகொள்ளும்படி செய்கிறான்.

யாருடைய இதயத்தில் இறைவன் எழுந்தருளியிருந்து தன் மகிமையைத் தானே வெளிப்படுத்துகிறானோ, அவன் மட்டுமே இறைவனைப் பற்றிபேச முடியும்.

துயரத்திற்கு ஒரே மாற்று மருந்து சாதனைதான்.

# மனம் போல் வாழ்வு

— திரு. கு. ரவீந்திரன் —

மனம் போல் வாழ்வு என்கிறார்கள். ஆம் மனம்தான் எமது வாழ்வை நிர்ணயித்து விடுகின்றது. எம் மனத்தில் இரு வேறு எதிர்ச் சக்திகள் தொழிற்படுகின்றன. ஒன்று ஆக்க சக்தி அதாவது பக்தி. மற்றையது அழித்தற் சக்தி அதாவது பயம். ஆக்க சக்தியாகிய பக்தி எமது ஆன்மாவை மென்மேலும் உயரச் செய்கிறது. அழித்தற் சக்தியாகிய பயம் எமது ஆன்மாவை மென்மேலும் இழிநிலையை அடையச் செய்கிறது.

நாம் பக்தி என்று எதனைக் குறிப்பிடுகின்றோம் ஒரு மாணவன் தனது குருவிடம் செலுத்துவது பக்தி. ஒரு ஆன்மா இறைவனிடம் செலுத்துவது பக்தி. இவ்வாறு பக்தி செலுத்தப்படும் போது உயர்வு கிட்டுகின்றது.

சிலர் இறைவன் தம்மைத் தண்டித்து விடுவார் என்ற பயத்தினாலேயே சில காரியங்களைச் செய்கின்றனர். ஆனால் இக்காரியங்கள் சமயப் பண்பாட்டுக்கு முரணானவையாகக் காணப்படுகின்றன. இன்னும் சிலர் பிரதி பலனை எதிர்பார்த்து இறைவனை வேண்டிக் காரியங்களைச் செய்கின்றனர். இது உண்மையான பக்தி அன்று. உண்மையான பக்தி செய்பவன் பிரதி உபகாரத்தை எதிர்பார்க்கமாட்டான். ஆயினும் அவன் செய்யும் பக்தியே அவனை உயர் நிலைக்கு இட்டுச் செல்வதாகும்.

மனிதனின் மிகவும் குறைந்த பட்சத்தேவை நிம்மதி. அதைத் தெய்வத்திடம் இருந்து பெற்றுக் கொள்பவன் பெயர்தான் இந்து. பக்தி செய்வதற்குச் சிறந்த இடம் கோவில் ஆகும்.

நெஞ்சுக்கு நிம்மதி - அதுவே
ஆண்டவன் சந்நிதி

கடவுளே இல்லை என்று வாதாடுபவர்கள் எவரும் தமக்கு மரணமே இல்லை என்று வாதாட முடியவில்லையே. நாம் பல்வேறுபட்ட அனுபவங்களின் மூலம் பல விடயங்களைக் கண்டு கொண்டு அதற்கேற்ப நடந்து கொள்கின்றோம். இதே போல மனிதன் பக்தி செலுத்துதல் மூலம் இறைவசப்பட்டுவிட்டால் அவன் தெய்வத்தைக் காண முடியும். நாம் இறைவனை உணர்ந்து கொள்வதற்கு, அல்லது இறைவனிடம் பக்தி செலுத்துவதற்கு மனோதிடம்

எப்படியாவது சிலநேரம் தனிமையில் இருந்துபார்.

இன்றியமையாதது. திருஞான சம்பந்தர் அடியார் கூட்டத்து டன் தங்கியிருந்த மடத்துக்குச் சமணர் தீயிட்ட போதும் அவர் பயம் கொள்ளவில்லை. பக்தியே செய்தார். திருநாவுக்கரசர் கல் லோடு கட்டிக் கடலில் தள்ளப் பட்ட போதும் பயம் கொள்ள வில்லை. பக்தியே செய்தார். எமக்குத் தொல்லைகள் நேரும் பொழுது நாம் பக்தி நிலையில் தளர்ந்துவிடுகின்றோம். ஆனால் இந்நிலை மெய்யடியார்களுக்கு உண்டாவது இல்லை. மனத்தை நிலை நிறுத்துவதனாலேயே இந் நிலை சாத்தியமாகின்றது. மனத்தை நிலை நிறுத்துவது சாத்தியமாயின் வேண்டிய யாவுமே சித்திக்கும்.

ஒருவன் தேவலோகத்திற் குப் புதிது. அவன் கற்பகதரு மர நிழலில் அமர்ந்திருந்தான். அது நினைத்ததெல்லாம் கொடுக் கும் கற்பகதரு என்பதனை அவன் அறியான். உணவு யாதா யினும் கிடைக்குமோ என்று எண் ணினான். வகை வகையான உணவுகள் அவன்முன்னே தோன் றின. அருந்தினான். படுக்கை கிடைக்குமோ என எண்ணி னான். மிக நேர்த்தியான பஞ் சணை மெத்தை அவன்முன்னே தோன்றியது. படுத்தான். அவ னிடத்தே சிற்றின்ப வேட்கை தோன்றியது. அழகான மங்கை ஒருத்தி அவன்முன்னே தோன்றி னாள். அவள் பசாசாக இருக் குமோ என எண்ணினான். அவள் பசாசாகவே மாறினாள். அப் பசாசு தன்னைக் கொன்று விடுமோ என எண்ணினான். அது அவனைக் கொன்றே விட் டது. இதிலிருந்து என்ன தெளி வாகின்றது. இறைவன் கற்பக தருவைப் போன்றவர். நாம் வேண்டுபவற்றை அருள்பவர். ஆனால் நாம் ஒரே நினைவில் நிற்கமுடியாதவர்களாக உள் ளோம்.

பிரமாவைக் குறித்து நித் திய வரம் வேண்டிக் கடும் தவம் புரிந்த கும்பகர்ணன் சரஸ்வதி யின் திருச்செயலால் நித்திரை வரம் பெற்றான். ஆகவே மனத்தை நிலைநிறுத்தப் பயின்று கொள்வோமாயின் பல காரியங் களை இலகுவாகச் செய்துவிட முடியும்.

நாம் கண்டவாறு ஆசை கொள்ளாமல் நமக்குக் கீழேயும் பலர் உள்ளனர் என்று நினைத்து ஆண்டவன் இவ்வாறாவது எம்மை இருக்கவிட்டுள்ளார் என்று திருப்திப்பட்டுக்கொள்ள வேண்டும். இதனையே,

" உனக்குக் கீழே உள்ளவர் கோடி
நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு "

என்று கவிஞர் கண்ணதா சன் குறிப்பிடுகின்றார். கோவி லில் உள்ள சிலையை வணங்குவ தில் என்ன பயன் என்று கடவுள்

விருப்பம் நிறைவேறாத போதுதான் குணம் வெளிப்படும்.

நம்பிக்கை அற்றவர்கள் கேட்கிறார்கள். இது அவரவர் மனோ நிலையைப் பொறுத்தது.

"தெய்வம் என்றால் அது தெய்வம் - வெறும்
சிலையென்றால் அது சிலைதான்"

கல்லிற் செதுக்கப்பட்ட நாய் உருவத்தை நாய் என்று நினைத்துப் பார்ப்பவர்களுக்கு அக்கல் தெரிவதில்லை. இதே போல் கல் என்று நினைத்துப் பார்ப்பவர்களுக்கு நாய் உருவம் தெரிவதில்லை. இது பின்வருமாறு கூறப்படுகிறது.

"நாயைக் கண்டாற் கல்லைக் காணோம்
கல்லைக் கண்டால் நாயைக் காணோம்"

எனவே எமது மனத்தை ஒருநிலைப்படுத்த வேண்டும். விரதம், தவம், தியானம் ஆகியன யாவும் மனத்தை அடக்குவதற்கான உபாயங்களே ஆகும். மனத்தை எவ்வழியில் அலைய விடுகின்றோமோ அவ்வழியில் நாமும் அவ்வடிவினைப் பெற்று விடுகின்றோம் என இராமாயணம் காட்டி நிற்கின்றது. மனிதன் தெய்வமாகின்றான். மனிதன் பேரின்பநிலைக்கு ஆளாகின்றான். இவை எல்லாம் மன அடக்கத்தால் விளைபவையே ஆகும். ஆகவே மனத்தை அடக்குவோம். மகிழ் வாழ்வு பெறுவோம்.

○✶○

---

புகழோ, பழியோ எதுவானாலும் இரண்டுமே ஒரு நல்ல மனிதனை அவன் இயல்பாக நடந்து போகிற நடையிலிருந்து சில விநாடிகள் நிறுத்தித் தயங்க வைத்து விடக்கூடியவை புகழால் தயங்கி நின்றாலும் அது தயக்கம்தான். பழியால் தயங்கி நின்றாலும் அது தயக்கம்தான். எப்படித்தயங்கினாலும் சரி, தயங்கி நிற்கிறோம் என்ற நிலைதான் முக்கியம். நடந்து போகிற ஒருவனைக் கல் தடக்கி நிற்கச்செய்தாலும் தடைதான். கை தட்டி அழைத்து நிற்கச்செய்தாலும் தடைதான். இன்னும் சொல்லப்போனால் பழியால் தயங்கி நிற்பதை விடப் புகழால் தயங்கி நிற்பதுதான் அதிகமாக இருக்கும்.

புகழோ பழியோ எதுவானாலும் இரண்டையும் தாமரை இலைமீது தண்ணீராகக் கருதினால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

---

○ நம்மை உயர்த்துவது செயலன்று, ஆர்வமே. ○

# இலட்சியத்துடன் கூடிய வாழ்க்கை வாழ்வது எப்படி?

< சி. மு. சிவமுத்துக்குமரன் >

மனிதன் வாழப் பிறந்தவன். அவன் எவ்வாறு வாழவேண்டும்? இதனையே வள்ளுவர்.

'' வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் '' என்றார்.

இலட்சியத்துடன் கூடிய முறையான வாழ்க்கை வாழும் போதே எல்லாவற்றுக்கும் மேலான வீடுபேற்றை அடைய முடியும் என்பது இக்குறள் மூலம் தெட்டத்தெளிவாகின்றது.

வாழ்வாங்கு வாழ ஒவ்வொருவரும் வாழ்க்கையில் ஓர் இலட்சியத்தைக் கொண்டிருக்க வேண்டும். ஒருவன் தான் வாழ்க்கையிற் சாதிக்க வேண்டியது என்ன என்பதை ஆராய்ந்து ஓர் சிறந்த இலட்சியத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இலட்சியத்தை ஏற்படுத்திக் கொள்ளாதவன் 'குளத்தில் மிதக்கும் கட்டைக்கு' ஒப்பானவன். உலகிலே பல துறைகள். ஒவ்வொரு மனிதனுக்கும் குறிப்பிட்ட துறைகளிலே இயற்கையாகவே பற்று ஏற்பட்டுவிடுகிறது. அத்துறை தொடர்பாக ஓர் உயர்ந்த இலட்சியத்தை ஏற்படுத்திக் கொள்பவன்தான் பின்னர் ஓர் உயர்ந்த மனிதனாக, வெற்றி வீரனாகத் திகழச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

ஒருவன் தன்னுடைய அறிவு, திறமை, ஆரோக்கியம் என்பவற்றுக்கேற்ப இலட்சியத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும். அவ்வாறாக இலட்சியத்தைத் தேர்ந்தெடுத்த பின் அதை எவ்வாறு நிறைவேற்றுவது எனத் திட்டம் போடுவதுடன் அதற்கான கால வரம்பையும் நிர்ணயிக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் ஒழுங்காக மேற்கொண்டவன் இனி இலட்சியத்தை அடையத் தீவிரமாக உழைக்க வேண்டும். தோல்வி, வறுமை என்பவற்றைக் கண்டு எவன் தனது உழைப்பை நிறுத்தாமல் தொடர்கின்றானோ அவனே தனது இலட்சியத்தைக் கடைசிவரை காப்பாற்றியவனாகின்றான்.

நல்லோரை நாடு ஆனால் அல்லோரை வெறுக்காதே.

ஆபிரகாம்இலிங்கன், நியூட்டன், நெப்போலியன், எடிசன் போன்ற இலட்சியவீரர்கள் ஏழ்மையிலே பிறந்தாலும் கடுமையான உழைப்பின் மூலம் தமது இலட்சியத்தை வென்றெடுத்தவர்கள்.

" ஒருவனுடைய முன்னேற்றம் அவனது முயற்சி அதாவது உழைப்பைப் பொறுத்தே அமையும். அவன் வளர்ந்த சூழ்நிலையைப் பொறுத்ததல்ல " என்ற பெனர்ஜிதங் கூற்றுக்கிணங்க வாழ்ந்து காட்டியவர்கள்.

இமயமலை உச்சியை அடையவேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்ட ஸோனாம் இருமுறை தோல்வியைச் சந்தித்தார். இரண்டாவது தடவை முயற்சி செய்தபோது இறுதியில் மரணப் படுக்கையிற்கூட இருந்தவர். இறுதியாகத் தனது தளராத மனோதிடத்தாலும் கடுமையான உழைப்பினாலும் எவரெஸ்ற் சிகரத்தில் இந்தியக் கொடியை நாட்டினார். அவர் தனது இலட்சிய வெற்றி பற்றிக் கூறும்போது " புகழ், செல்வம், மதிப்பு போன்றவை ஒருவனுடைய உழைப்பையும் அறிவையும் பொறுத்தே அமையும் " என்கின்றார்.

இதனையே இலட்சிய வீரரான தோமஸ்அல்வாஎடிசன் கூறும்போது

" Success is the one percent inspiration 99% percent perspiration " என்றார்.

அதாவது ஒருவனுடைய வெற்றிக்கு 99% வியர்வை சிந்தும் கடுமையான உழைப்பும் 1% வெற்றியடைய வேண்டும் என்ற உத்வேகமும் அவசியம் என்பது மேல்வரும் கூற்றின் மூலம் புலப்படுகின்றது.

அடுத்ததாக, இலட்சியத்தை அடைய ஒருவன் தனது அறிவை நன்கு வளர்த்துக்கொள்ள வேண்டும். அறிஞர்கள், மேதைகள் போன்றவர்களை அணுகித் தமக்குப் புலப்படாத விடயங்களை ஆராய்ந்து புரியச் செய்தல் வேண்டும். ஒருவன் அறிஞனாகவும், ஒழுக்க சீலனாகவும் திகழ்வதற்கு வாழ்க்கையில் அவனுக்கு " 3R " கள் அவசியமாகின்றன. அவை

1) Respect
2) Responsible
3) Resourcefulness

என்பன எவன் மரியாதை உள்ளவனாகவும் பொறுப்பு, நம்பிக்கைத்தன்மை உள்ளவனாகவும் விவேகத்தைக் கையாளும் திறமை, மதிநுட்பம் உள்ளவனாகவும் காணப்படுகின்றானோ அவன் என்றோ ஒருநாள் இலட்சிய வீரனாகப் போற்றப்படுவான்.

அன்பாயிரு ஆனால் அடிமையாயிராதே.

அடுத்ததாக ஒருவன் தனது இலட்சியத்தை நிறைவேற்ற நேரத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒருவன் தனது ஒவ்வொரு விநாடியையும் எவ்வாறு பயன்படுத்துகின்றானோ அதைப் பொறுத்தே அவனது இலட்சிய வெற்றியும் அமையும். இதனையே ஓர் ஆங்கிலப்பெரியார்.

" Take time for the work. It is the price of Success " என விபரித்துள்ளார்.

இறுதியாகத் தனது இலட்சிய வெற்றியில் முழுமையான தன்னம்பிக்கை உடையவனாக இருக்கின்றவனே கடுமையான உழைப்பின் மூலம் குறித்த இலக்கை அடையக்கூடியவன். இலக்கை அடைதற்காகக் கடுமையாக உழைப்பவனும் அவன் தான்.

தோல்வி, அவமானம், ஏமாற்றம் போன்றவற்றைக் கண்டு மனம் தளராமல் உழைத்தால் எவரும் சரித்திர புருஷர்களாக இலட்சிய வீரர்களாக மாறலாம். தயக்கத்தைத் தவிர்த்து நம்பிக்கையைத் துணைக்கொண்டு இலட்சிய வெற்றி நோக்கி முன்னேறுங்கள். சந்தேகமில்லாமல் முன்னேறலாம்.

## பஜனையின் பலன்

பஜனையில் ஒன்றாகச்சேர்ந்து பாடும்போது, தனித்தனியே பாடமுற்படுபவர்களின் தயக்கம், சொற்களைக் கூறுவதில் உள்ள தவறு எல்லாம் நீங்கி விடுகிறது. அத்துடன் இதயத்தின் அடித் தளத்திலிருந்து முழு வேகத்துடன் பாடும் உணர்ச்சிப்பெருக்கும் உண்டாகிறது. நூறுபேர் சேர்ந்து செய்யும் பிரார்த்தனை ஒருவர் தனியே செய்வதைக் காட்டிலும் அதிகச்சக்தி வாய்ந்தது. ஒருவர் தனியே செய்யும் துதி, அவர் மனத்தளவில் மிகவும் தூய்மையானவையாக இருந்தால் சிறந்த பலனைக்கொடுக்கும். இல்லையெனில் அதனால் எந்தப் பலனும் கிடைக்காமற் போய் விடும். பஜனையில் பலரும் சேர்ந்து செய்யும் பிரார்த்தனையில் ஒரு சிலராவது அப்படி மனத்தூய்மை கொண்டவர்களாக இருப்பார்கள். அப்போது அவர்களிடமிருந்து கிடைக்கும் சக்தி அந்தப் பிரார்த்தனையின் மகிமையை உயர்த்திவிடும். அப்படி ஒரு சில தூய உள்ளங்கள் மனம் உருகிப்பிரார்த்தனை செய்யும் போது அதன் பலனை அனைவரும் அடைவார்கள். சமூகமே பலன் பெறும். நாடே நன்மையடையும்.

# திருவாசக விழா

சந்நிதியான் ஆச்சிரமச்சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வருடாந்தத் திருவாசகவிழா 07-01-2001 ஞாயிற்றுக்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. விழாவிற்கு பருத்தித்துறை மாவட்ட நீதி பதி பெருமதிப்பிற்குரிய S. A. E. ஏகநாதன் அவர்கள் சிறப்புரை ஆற்றுவதற்கு வருகை தந்து விழாவைச் சிறப்படையச் செய்தார்கள்.

விழா ஆரம்பமாவதற்கு முன் வழமை போல ஸ்ரீ செல்வச்சந் நிதி ஆலயத்தில் விசேட அபிஷேகம் இடம்பெற்றது. அபிஷேகத்தைத் தொடர்ந்து நாயன்மார்களின் உருவப்படங்களும், திருவாசக ஏடு களும் ஆச்சிரமத்திற்கு எடுத்துவரப்பட்டன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமகா சந் நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் விழாவில் அருளுரை வழங்கினார்கள். காரைநகரில் இடம்பெற்ற திருவாசக விழா உட்படப் பல நிகழ்வுகளில் கலந்து கொண்டு உடல்களைத்தி ருந்தாலும் கூட மனச்சோர்வு சிறிதும் இன்றி வழமைபோல எமது விழாவிற்கும் வருகைதந்து மக்களை ஆற்றுப்படுத்தும் பல அரியகருத் துக்களைத் தமது அருளுரையில் அடியார்களுக்கு வழங்கினார்கள்.

தெய்வீகம் நிறைந்த திருவாசக இசையை இராமநாதன் நுண் கலைப்பீடத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ந. வி. மு. நவரத்தினம் குழு வினர் பக்திச்சுவை சொட்டச்சொட்டப் பக்தர்கள் மெய்ம்மறக்கும் வகையில் இசைத்தார்கள். திருவாசகம் மணிவாசகரால் இயற்றப் பட்டிருந்தாலும் கூட அது தெய்வீகத்தன்மை வாய்ந்தது என்ற உண்மையை திரு. ந. வி. மு. நவரத்தினம் அவர்கள் திருவாசக இசை யின் இடையே அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்கள்.

மாவட்ட நீதிபதி அவர்கள் சைவ உலகத்திற்கு அவசியமான பல பணிகளை இந்த ஆச்சிரமமும், பேரவையும் சிறப்புடன் மேற் கொண்டுவருவதைத் தமதுஉரையில் குறிப்பிட்டுக் கூறியதுடன் இந்தப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதற்கும், அவை மேலும் வளர்ச்சியடைவதற்கும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

பெருமதிப்பிற்குரிய மாவட்ட நீதிபதி S. A. E. ஏகநாதன் அவர்களின் உரையைத் தொடர்ந்து திருவாசகப் பண்ணிசைப்

வாழ்க்கை என்பது அடித்தல் அல்லது அடிபடுதல்.

போட்டியில் வெற்றிபெற்ற பிள்ளைகளின்பண்ணிசை ஓதும் நிகழ்வு இடம்பெற்றது. அதைத்தொடர்ந்து மாவட்ட நீதிபதி அவர்களினாலும் அவரின் பாரியார் திருமதி சகுந்தலாதேவி அவர்களினாலும் பரிசில்கள் வழங்கப்பட்டன. வெற்றியீட்டிய பிள்ளைகளுக்கு மட்டுமன்றி வழமைபோலவே போட்டியிற் பங்குபற்றிய அனைத்துப் பிள்ளைகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்களும், ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் திரு. சி. முருகேசம்பிள்ளை அவர்களும் விழாவிற்கு வருகைதந்து உற்சாகமூட்டும் பல கருத்துக்களை அடியார்களுக்கு வழங்கினார்கள்.

## பண்ணிசைப் போட்டியில்
## வெற்றிபெற்றோர் விபரங்கள்

### பிரிவு 6-7

முதலாம் இடம் :- செல்வி ஆரணி ரவீந்திரன்
(யாழ் / இந்து மகளிர் கல்லூரி)

இரண்டாம் இடம் :- செல்வி சைந்தவி ஜெயராமன்
(யாழ் / இந்து மகளிர் கல்லூரி)

மூன்றாம் இடம் :- செல்வி கஸ்த்தூரி கணேசமூர்த்தி
(விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி)

நான்காம் இடம் :- செல்வி திவ்வியாவந்தி சிவலோகநாதன்
(உடுப்பிட்டி, மகளிர் கல்லூரி)

ஐந்தாம் இடம் :- செல்வன் கோபாலசர்மா ரகுவரன்
(கந்தரோடை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

### பிரிவு 8-9

முதலாம் இடம் :- செல்வன் கோபாலலிங்கம் பாலகுமார்
(யாழ் / ஞானசாரியார் கல்லூரி, கரவெட்டி)

இரண்டாம் இடம் :- செல்வி மாலினி பேரம்பலம்
(யா / பெரியபுலம், மகாவித்தியாலயம்)

அன்புள்ள குணம் அலையில்லா நதி.

செல்வன் சி. ஹரிகரன்
( யா / உடுப்பிட்டி, அ. மி. கல்லூரி )

மூன்றாம் இடம் :- செல்வி பிரபாலினி சிவஞானம்
( யா / தொண்டைமானாறு, வீ. ம. வி. )

செல்வி தர்ஷிகா நாகேந்திரம்
( பரு. மெதடிஸ் பெண்கள் பாடசாலை )

பிரிவு 10 - 11

முதலாம் இடம் :- செல்வி ஜீவிதா செல்வரெட்ணம்
( யா / பெரியபுலம் மகாவித்தியாலயம் )

இரண்டாம் இடம் :- செல்வன் குணரத்தினம் பாலகிருஸ்ணகுமரன்
( வல்வை சிவகுரு வித்தியாசாலை )

மூன்றாம் இடம் :- செல்வன் செல்வரெத்தினம் செந்தூரன்
( கொக்குவில் இந்துக் கல்லூரி )

# ஞானச்சுடர் சந்தாதாரர்களுக்கு
# அன்பான வேண்டுகோள்

எமது மலரிற்குரிய சந்தாவினை காசோலையாக செலுத்த விரும்புவோர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைக்கணக்கு இலக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

செ. மோகனதாஸ்
P. 7481
இலங்கை வங்கி
பருத்தித்துறை.

ஒரு வினாடிப் பொறுமை பத்து வருட சுகம்.

# அன்பு மார்க்கம்

() சந்திரலீலா நாகராஜா ()

நாம் மனிதப்பிறப்பு எடுத்ததன் பயன் தெய்வம் நமக்குத் தந்தருளிய உடம்பு, இந்திரியங்கள், மூலம் இறைபணி நின்று முத்தியடைதற்கே. அன்பே கடவுள் என்பது எல்லா மதங்களிலும் காணப்படும் பொதுக் கொள்கை. இந்து சமய நெறி அன்பின் வடிவமாக இறைவனைக் காண்கிறது அன்பின் வழியாக இறைவனைக் காட்டுகிறது. இதையே திருமூலரின் திருமந்திரத்திற் காணலாம்.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே''

இந்த அன்பின் திறம் ஒவ்வொருவர் நிலைக்கேற்ப வெளிப்படுகிறது. தமது வாழ்வின் இலட்சியங்களில், கடமைகளில் தொண்டுகளில் அன்பு மார்க்கத்தை வெளிக்காட்டிய அடியார்கள் மக்கள் தொண்டையே மகேசன் தொண்டாகக் கருதினர்.

'' மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல் ''

என்றார்.

திருஞானசம்பந்தர். இளையான்குடிமாற நாயனார் தம் செல்வத்தினை மெய்யடியார்களுக்கு அமுதளித்தலிலே செலவிட்டார். வறுமை அவரை வாட்டிய போதும் தொண்டினின்றும் விலகாது முத்தியடைந்தார். அந்நிலையிலும் மேலான கைங்காரியத்தைச் செய்தவர் சிறுத்தொண்டர் நாயனார். தனது மகவையே கறியாகச் சமைத்து அடியார்க்கு நிவேதித்தவர்.

'' அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறிவும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினியவா மென்றும் ''

ஆரோக்கியத்திற்கு ஒப்பான நண்பன் வேறுயாருமல்ல.

தன்னுடைய உடலின் ஒரு பகுதியாகிய கண்ணையே இறைவனுக்கு அர்ப்பணித்து, இறைவன் திருவாயாற் புகழப்பட்ட எல்லையில்லாத அன்பையுடையவர் கண்ணப்பநாயனார். கண்ணப்பரின் 'தீர்த்த அன்பிற்கு நிகரான பேறினி வேறுண்டோ' என்றார் சேக்கிழார் சுவாமிகள் தீர்த்த அன்பாய அன்பர்க்கு அவரிலும் மேம்பட்ட அன்பையுடையவர் கடவுள். மாணிக்க வாசகர் சிவபெருமானை "அன்பினில் விளைந்த ஆரமுதே" என்கிறார்.

மனக்கோயிலில் இறைவனையிருத்தி, உணர்வெனும் விளக்கேற்றி ஆனந்தமென்ற திருமஞ்சனமாட்டி அன்பென்ற அமுதினை அர்ப்பணமாக்கி அர்ச்சித்து வழிபட்ட வாயிலார் நாயனாரின் அகப்பூசையின் சிறப்பினை

"மறவாமை யானமைந்த மனக்கோயிலுள் ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனும் திருமஞ்சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச்சனை செய்வர்"
என்று பாடினார் சேக்கிழார்.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கிவே நோக்குவார்
கூடும் அன்பினால் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

கூடும் அன்பினில் அடியவர்கள் கும்பிடுவது உலகின் நலனுக்கே.

முதலாழ்வார்களில் ஒருவராகிய பூதத்தாழ்வார் உள்ளத்தில் ஒரு விளக்கு ஏற்றினார். அதற்கு அன்பு - அகல்; ஆர்வம் - நெய்; எண்ணம் - திரி; ஞானம் - விளக்கு;

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா நன்றுருகி
ஞானச்சுடர் விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்"

இறைவனின் அன்பைப் பெற்றவர் இழிகுலத்தினராயினும் அவர் வணங்குவதற்குரியவர் என்பதை அப்பர் கூறுகின்றார்.

சித்தம் பரிசுத்தமாக இருக்க வேண்டும்.

" அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயராய்
ஆவுரித்துந் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக் கரத்தார்க் கன்பராயின்
அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே"

இராமகிருஷ்ணர் அன்பில் மூன்று படிகள் உண்டு என்றார். தம்முடைய இன்பத்திற்காகப் பிறரை நேசிப்பது கடைநிலையன்பு. தம்முடைய இன்பத்திற்குச் சமனானது தோழமையன்பு யாரை நேசிக்கிறோமோ அவர் பொருட்டுத் தன் இன்பத்தையும் தியாகம் செய்யும் சமர்த்த அன்பு. இதுவே பக்தியாகும். அன்பு வேறு, ஆசை வேறு, அன்பின் விளைவு ஆரமுது, ஆசையின் விளைவு துன்பம்.

" ஆசைக் கோரளவில்லை அகிலமெல்லாங் கட்டியாளினும் "
என்பது தாயுமானவரின் பாடல்.

எதிலும் அளவுக்கு மீறிய ஆசை கூடாது இதைத்தான்
" ஆசை அறுமின்கள்; ஆசை அறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்" என்றார்கள்.

ஈசன் மீது கூட ஆசை வையாது அன்பு வையுங்கள்.

வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் இயற்றிய திருவருட்பா அன்பு நெறியைப் புகட்டும் நூலாக விளங்குகிறது. அவர் இறைவனிடம் விண்ணப்பம் செய்வதும் அன்பு நெறியையே காட்டுகிறது.

" அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும் "

எல்லா உயிர்களிலும் அன்பு செலுத்துபவன் எவனோ அவனே இறைவனிலும் அன்பு செலுத்துபவன் ஆவான். ஜீவகாருண்ணிய ஒழுக்கத்திற்கு அடிப்படை அன்பேயாகும். இராமலிங்க சுவாமிகள் இது பற்றிப் போதித்துள்ளார். புலால் உண்ணாமை, பசித்து வருபவனுக்கு அன்னம் இடுதல் பிறவுயிர்களை நேசித்தல் முதலியன ஜீவகாருண்யத்தில் பாற்படும் எவன் ஒருவன் அன்பையும், இரக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கை நடாத்துகிறானோ, அவனுக்கு இறைவன் அருள் புரிவார் என்னும் ஜீவகாருண்ய போதனையைக் கீழ்க்கண்ட கடவுள் வாழ்த்து மூலம் தெரியப் படுத்துகிறார்.

" அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே!
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே!
அன்பெனும் கடத்தினுள் அடங்கிடும் கடலே
அன்பெனும் அணுவுளார் ஒளியே!
அன்பெனும் உயிருள் ஒளிர்தரும் அறிவே
அன்புருவாம் பர சிவமே! "

இராமலிங்க சுவாமிகள் வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் மனம் வாடினார். பசியினால் அல்லற்படுவோரைக்கண்டு உளம் பதைபதைத்தார். பிணியால் வருந்துவோரைக் கண்டு உள்ளம் நொந்தார். இவை அவரது கருணையுள்ளத்தைப் புலப்படுத்துவன. இவைபற்றிப் பேசுவதில் மட்டும் பயனில்லை. சீலம் மிக்க சான்றோரின் கொள்கைகளைப் பற்றி நாமும் அதன் வழி நடப்போமாக! அன்றாட வாழ்விலும் தொழிலிலும் நாம் மனம், வாக்கு, காயங்களினால் நல்லெண்ணம் உடையராக, நற்செயல்கள் உடையராக வாழ்வதே அன்பு மார்க்கம். மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களிடமும், சிறையிலிருக்கும் கைதிகளிடமும் அநாதை விடுதிகளிலுள்ள ஆதரவற்றோரிடமும், வயோதிபர்களிடமும் பிராணிகள், விலங்குகள், பறவைகளிடத்தும் அன்புடன் நடத்தல் வேண்டும். ஆறுமுகநாவலர் அன்பைத் தலையன்பு, இடையன்பு, கடையன்பு எனப்பகுத்தார். இறைவனுடைய நாமத்தைக் கேட்ட மாத்திரத்தில் வசமழிதல் தலையன்பு. இறைவனைக் கண்டதும் வசமழிதல் இடையன்பு. இறைவனைக் கூடியமாத்திரத்தில் வசமழிதல் கடையன்பு திருவள்ளுவர் அன்புடைமை எனும் அதிகாரத்தின் மூலம் அன்பை விளக்கியுள்ளார்.

" அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு "

இந்து சமயத்தில் மட்டுமல்லாது பிறசமயங்களும் அன்பையே போதித்துள்ளன. புத்த பெருமான் அன்புதான் இன்ப ஊற்று, அன்புதான் இன்ப ஜோதி, அன்புதான் உலக மகா சக்தி என்று போதித்தார்.

இயேசுநாதர் 'உன்னைப் போல் உன் அயலானையும் நேசி' என்றும் Love is god என்றும் உபதேசித்தார்.

கல்வியின் பயன் அறிவும், பணிவுமாகும்.

பகவான் பாபா ' Love all, Serve all ' என்று கூறினார்.

இவ்வாறு அன்புடன் நடப்பதற்கு நம்பிக்கை, விடாமுயற்சி, இறையருள் வேண்டும். அவன ருளாலே அவன் தாள் வணங்கி உய்தி பெறுவோமாக! இறைவனை நினைந்து உருகும் மாணிக்கவாசகர் " ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடை அன்பே " என்று பாடி நின்றார். நாமும் அன்பு நெறியைப் பின்பற்றி வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக!

---

பகலும், இரவும் சேர்ந்துதான் ஒரு நாள் நமக்குப் பகலும் வேண்டும், இரவும் வேண்டும். பகலிலே நமக்கு வேண்டிய உணவுக் காகவும் உடைக்காகவும் வேலை செய்கிறோம். பாடுபடுகிறோம். சம்பாதிக்கிறோம். கடைசியிலே களைத்துப் போய்ச் சோர்ந்து விடுகிறோம். இரவிலே களைப்பு, சோர்வு எல்லாம் போக்குதற்காகப் படுத்து உறங்கி விடுகிறோம். எழுந்திருக்கும் போது தெம்போடு எழுகிறோம். அதனால் நமக்குப் பகலும் வேண்டும். இரவும் வேண்டும். இதிலிருந்து என்ன தெரிகிறது? வெளிச்சம் தோன்றியபோதே இருட்டும் தோன்றி விட்டது. இரண்டும் நமக்கு வேண்டும். இருட்டிற் பயமாக இருக்கிறதே என்றால் அதற்காக இருட்டே வேண்டாம் என்று சொல்ல முடியுமா? வெளிச்சமிருந்தால் தூக்கமே வராது அதனால் தூக்கம் வேண்டும். இரவும் வேண்டும் நிழலில் இருக்கும் ஒருவனுக்கு நிழலின் அருமை தெரியுமா? வெயிலில் போய்விட்டு வந்தவனுக்குத்தான் நிழலின் அருமை தெரியும். அது போலத்தான் வாழ்க்கையும். வாழ்க்கையில் சுகத்தின் அருமை தெரிவதற்காக நடு நடுவே சற்றே துக்கத்தையும் கொடுக்கிறார் இறைவன். துக்கம் வரும் போதுதான் நமக்கு உண்மை விளங்குகிறது. கஷ்டத்தைக் கொடுத்து "இறைவன் நம்மைச் சோதனை செய்கிறார் சோதனை வரும் போது நாம் கலங்கக் கூடாது எல்லாம் இறைவன் செயல் என்று அவன் மீது பாரத்தைப்போட்டுவிட்டு நாம் நம் கடமையைச் சரியாகச் செய்தால் வரும் சோதனைகளெல்லாம் சாதனைகளாகி விடும்.

---

உலகில் எதையும் 'உனது' என்று நினைக்க வேண்டாம்.

# பேரின்பத்தை உணர்த்தும்

# சிருங்கார அருட்பாக்கள்

< கைலை க. நடராசா >

இன்பமிரண்டு வகை. ஒன்று பேரின்பம், மற்றொன்று சிற்றின்பம். முன்னையது நித்தியமானது. இதனை ''இன்பரசத் தேனமுது'' என்பர் அருணகிரி. பின்னையது நிலையற்றது. வந்தவாறே ஓட்டெடுப்பது.

எனினுமிவ்விரண்டும் ஐம்புலனடக்கமே. திருவுந்தியாரெனுஞ் சித்தாந்த சாத்திரம் '' சிற்றின்பமே பேரின்பம் என்று பேசுகிறது. இச்சித்தாந்தக் கருத்தை வள்ளுவம்,

''கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணேஉள ''

என்று வழிமொழிகிறது.

பேரின்பத்தையுணர்த்திச் சிருங்காரம் துளிர்க்கவரும் பாக்களும் அருட்பாக்களே அவ்வண்ணம் பேரின்பத்தையுணர்த்தாது சிருங்காரச் சுவையை மாத்திரம் புலன்செய்யும் பாக்களெல்லாம் மருட்பாக்கள். இவ்வகைப் பாக்கள் அருள் நூல்களிலும் இடம்பெறலாம். அவ்வாறிடம் பெறுதல் காப்பிய வரைவிலக்கணத்தின் உடன்பாடு.

சிருங்காரச் சுவையினாற் பேரின்பத்தையுணர்த்திக் காட்டுதல் ஒருதனிக்கலை. இந்த வரிசையில் நாவுக்கரசரின் கைவண்ணத்தை முதற்கண்பார்ப்போம்.

தன்னைத்தானே தலைவியாக வைத்து, இறைவனைத்தன் தலைவனாக உருவகஞ் செய்து, அவனோடு தாடலைப்பட்ட ஒரு தலைவியின் கதையிது. இந்த அத்துவிதக்கதையைச்சிருங்காரச் சுவையினாற் சித்திரித்துக்காட்டுகிறார் வாகீசர்.

தலைவி தலைவனைக்கண்டமாத்திரத்தே, முன்னம் அவனுடையநாமங்கேட்டாள். பின்னை அவனிருக்கும் வண்ணங் கேட்டாள். பெயர்த்தும் அவனுடைய ஆரூர் கேட்டாள். இவ்வாறு அகப்பொருள் முறையானே பெயர், ஊர் என்பனவற்றைக் கேட்டறிந்த பின்னை, ஒருகணப்பொழுதேனுங் காலத்தைக் கொன்னே கழிக்காது, அக்கணமே தன்வயமழிந்து, அவன்

மயமாகி அவனுக்கேபிச்சியாகின்றாள்.

பிச்சியான அத்தலைவி அப் பரிபக்குவ நிலையில் அப்போதே, அன்னையையும் அத்தனையும் நீத்து, அகலிடத்தாராசாரத்தை மறந்து, தன் நாமங்கெட்டுத் தலைவன் தாளைத் தலைப்படுகின்றாள்.

என்றிவ்வாறு பொருள் நாற்றுணிபு பற்றிப் பேரின்ப நுகர்வு புலனாகப் படைத்த படைப்பின் முழுவடிவமிது. அருமருந்தன்ன தேவாரம்.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையு மத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள கவிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள்நங்கை தலைவன் தாளே.

''அவனுக்கே பிச்சியானாள்'' என்பதில் வரப்பெற்ற ஏகார இடைநிலை, தலைவி பெற்ற பேரின்ப நிலையின் உச்சக் கட்டத்தை எட்டிப்பிடித்து உணர்த்தி நிற்பதை உய்த்துணர்க. ''பின்னை, பெயர்த்தும்'' என்னுஞ் சொற்களை முறையே ''பின்னை மூர்த்தியவனிருக்கும் வண்ணங்கேட்டாள்'' பெயர்த்தும் அவனுடைய ஆரூர் கேட்டாள் என்று கொண்டு கூட்டிப் பொருள் காண்க.

அடுத்து ஞானசம்பந்தர் பேரின்பப் பெற்றியை இந்நெறியானே நெறிப்படுத்தும் வித்தகத்தை நோக்குவாம்.

ஒரு தனித்தலைவி, தோணிபுரத்தீசனிடம் காதலாகிக்கசிந்து கண்ணீர் மல்கித், தலையன்பு பூண்டு அவனைத்தலைக்கூடத் தவியாய்த் தவிக்கிறாள். அத்தவிப்பானது சிவப்பசியால் வரப்பெற்ற தவிப்பு தலைவியை வாட்டி வதைக்கிறது. அந்த இக்கட்டான நிலையில், தன்தலைவனின் திருநாமத்தைத் தனது செவிப்புலன் நுகருமாயின் தான் படும் தீரா நோய்க்கு அத்திருநாமம் மந்திரமும், தந்திரமும், மருந்துமாகித்தீர்த்தருளும் என்னும் முடிபுக்கு வருகிறாள். வரப்பெற்றதலைவி கிளியை நோக்கி.

கண்டோருள்ளத்தைச் சிறையிருத்த வல்ல அழகார்ந்த மடக்கிளியே என்று ஆதுரம் மீதூர விளித்து, இங்கே வாவென்றருகணைத்து அக்கிளிக்கு இன்னோரன்னவற்றைக் கற்பிக்கின்றாள்.

"நானுனக்குப்பாலுந் தேனுங்கலந்துதருவேன். நீ எனக்குத்தோணிபுரத்தீசன் பிறைசூடி அவனின் திருநாமத்தை யாருமறியாது மெல்லென எனக்கொரு காற் பேசாயோ. ஏனோ தெரியாது அவனின் திருநாமத்தை எனது கேள்வி மூலங்கள் கேட்டுத் தளிர்ப்படைய விரும்புகின்றன" இவ்வகையாகச் சாங்கோபாங்கமாகத் தலைவி கெஞ்சும் இந்தக் கெஞ்சு மொழிகள் சிருங்காரச்சுவை மிளிரப் பேரின்பத்தையுணர்த்தும் நயம் ஒரு தனி அழகு. அதன் முழுவடிவம்.

சிறையாரும் மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளம்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயோ.

ஏர்த்துஏர்த்து என்பு உருக்கும் அருட்பா இது.

மணிவாசகரைக்காண்போம். சிருங்காரச் சுவையாலே பேரின்பத்தைத் தொட்டுக் காட்டி உணர்த்தும் கவித்துவம் நயத்தற்பாலது. அது உண்ணவுண்ணத் தெவிட்டாத செந்தேன்.

களை எனக்குச் செய்து விட்டான். இவற்றையெல்லாம் நீ கேள்விப்பட்டாயோ? அல்லையே? சொல்லுகிறேன் கேட்குதி". என்று கூறி எடுத்தியம்புகின்றார்.

மாணிக்கவாசகருக்கு அம்மானை விளையாடும் மகளிரின் சந்திப்பு அண்ணாமலையிற் கிடைக்கப்பெறுகிறது. அம்மகளிர் பாடியாடுவதைக் கண்ணுற்ற வாசகருக்குத் திருப்பெருந்துறையில் ஞானதேசிகர் தம்மை ஆட்கொண்ட வண்ணத்தின் ஆனந்தக் களிப்புத்தலையெடுக்கிறது. அச்சமயத்தில் அம்மானை விளையாடும் மகளிர் குழாத்துள் ஒருத்தியை, "அம்மானை விளையாடும் பெண்ணே! என் தோழியே". யென்றின்னவாறு விளித்து " ஒப்பற்ற ஒருவன். எவராலும் செய்யத்தகாத செயல் தென்நாட்டான். திருப்பெருந்துறையான். பிறரெவராலுங் காட்டமுடியாத கண்டறியாத எல்லாவற்றையும் எனக்குக் காட்டிச், சிவமாகிய தாமாந் தன்மையையும் புலப்படுத்தித், திருவடித் தாமரை மலரையடைதற்கு உபகாரமாகிய ஞானத்தை உதிப்பித்துத், திருவருளாகிய தேனைக் காண்பித்துத், தமது ஒழுக்கத்துக்கு மாறுபட்ட எனது ஒழுக்கத்தை உலகோர் கண்டு இகழ்ந்து சிரிக்க, வீட்டின்பத்தையடைய ஆட்கொண்டு விட்டான். இவ்விதத்தைப் பாடி ஆடுதுமென்று தலைவியின் கூற்

எதையும் இறுதிவரை முயன்று செய்ய வேண்டும்.

றாகச் சிருங்காரச்சுவை தலை விரித்தாடுமாறு பேரின்ப உணர்வைத் தூண்டுகிறார். இது திருவாசகமென்னுந்தேன்.

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
திட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைக்காட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான் கொண்டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய்.

[ கிறிசெய்தவாறு - சொல்லொணாதனவற்றைச் செய்தமை ]

இன்னோரன்ன சிருங்காரப்பேரின்ப அருட்பாக்கள் சமயநூல்களிற் பரக்கக் காணலாம். இத்தன்மைத்தான வண்ணப்பாக்களை மேலோட்டமாக நோக்காது நுனித்து நோக்கி மெய்ப்பொருளுணர்தல் வேண்டும். உணருங்கால் தெய்வீக ஒளி மிளிர்வதைக் காணலாம். அவ்வுணர்வு சொல்லுந்தரத்தன்று அநுபூதியால் உணர வேண்டியது. அநுபூதி - அநுபவம்

" இருந்தமிழேயுன்னால் இருந்தேன் வானோரின்
விருந்தமிழ்த மென்றாலும் வேண்டேன் "

---

இன்று சமயம் பேசப்படுகின்றதே தவிர அதன்படி வாழப்பழக்கப்படவில்லை. மனத்தில் இருக்கின்ற அழுக்கை முதலில் நீக்க வேண்டும். அழுக்கை நீக்கும்பொழுது தெளிவும் தூய்மையான சிந்தனையும் தோன்றும் இந்தத் தூயசிந்தனை எம்மைத் தர்ம நெறியில் வாழச்செய்து இறுதியில் ஆத்மீக ஈடேற்றத்திற்கு இட்டுச்செல்லும்.

பிள்ளைகளைச் சிறுவயதிலிருந்தே சமயத்தில் வாழப்பழக்க வேண்டும். பிள்ளைகளைச் சமய சம்பந்தமான செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலமும், அவர்களுக்கு இது போன்ற போட்டிகளை நடாத்துவதன் மூலமும் அவர்களைச் சமய வாழ்க்கையில் வழிப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

வருடாந்தத் திருவாசக விழாவில்
மாவட்ட நீதிபதி
**S. A. E. ஏகநாதன் அவர்கள்**

சந்நிதி முருகனும்,

சந்நிதியான் ஆச்சிரம சைவ க. ப. பேரவையும்

# ஞானச்சுடரும்

/ வை. க. சிற்றம்பலம் /

அறம்பயில் தருமம் நிரம்பிடச் செய்யும்
அன்புசேர் தொண்டைமா நகரில்
பிறங்கிடு மரிய ரத்தின. முத்து
வேலினைக் கரத்தினி வேந்தித்
திறம்படு மயில்வாகன சுவாமிகள்
சீரடி தொழுதிட வந்தே
புறந்தரச் சந்நிதிக் கலைப்பண்பேரவையிற்
புகுந்தவுன் பொன்னடி சரணம்.

சண்முகாநின்னடி சரணம்

தண்டையுஞ் சிலம்பும் த்கதகத், தசையத்
தாரணி சிற்றடி யெடுத்து
எண்டிசை யடியா ரிருகரங் கூப்ப
ஏனென்று வந்துகேட் டன்னார்
கொண்டதுன் பங்கள் துயர்துடைத்தவர்க்குக்
குறையிலாப் பல்வரம் கொடுத்துத்
தண்டமி ழிசையில் தந்தென ஆடுஞ்
சண்முகா வுன்னடி சரணம்.

உடற்பசிக்கு - அன்னம்
உளப்பசிக்கு - ஞானச்சுடர்

உத்தம வடியார்க் கன்னமிட் டதனால்
உடற்பசி தீர்ப்பது மன்றி
மெய்த்தவர் உளத்தின் பிணியது அகல
மேலுமோ ருபாயத்தைச் சூழ்ந்து
சித்திசேர் சரியை, கிரியை,யோ கத்தின்
சிறப்பினுக் கொரு மலராக
வித்தக - ஞானச் சுடர்மலர் விட்டாய்
விளங்குசந் நிதிப்பெரு மரசே.

○ கோபம், குற்றம் காணல் ஆகிய இவற்றைத்தவிர்த்தல் வேண்டும். ○

வலம்வர நான்காண்டு தொட்டாய்

புலவர்கள் கவிஞர் போற்றுகட்டுரைகள்
பொருந்திட முப்பொருள் சுமந்தும்
அலகில்பா ரதமும் ஆங்கிலம், குறளும்
அற்புதம், அறவுரை சுமந்தும்
இலகிடுங் கந்தரநுபூதி யோடு
எழுந்துமுன் றாண்டது நிறைந்து
வலம்வர நான்காம் ஆண்டினைத் தொட்டாய்
வாழ்கஞா னச்சுடர், வளர்ந்தே.

---

# "வருஞ்சித் திரவேல் ஞானச்சுடரே"

ஊனாய், உயிராய், உலகமெலாம்
ஒளிரும் கருணைப் பேரிறைவா!
கோனாய்த், தமிழர் குலங்காக்கும்
குமரா! பரமகுரு தேவா!
தேனார், அமுதப் புனல் தவழும்
செல்வச் சந்நிதித் திருமுருகா!
வானோர், பணியும் படைத்தலைவா!
எந்தாய்; சந்நிதித் திரையவனே!

இறைஞ்சித் தொழுவார்க்கிரங்கி, மன
விருளைக்கடிந்துள் ளொளி பெருக்க,
வருஞ்சித் திரவேல் ஞானச்சுடரே!
வளர் செந்திணைத்தேன் வள்ளிமகிழ்
குறிஞ்சிக் கிழவா! அசுர
குலத்தை யழித்துன் குரைகழலை
இறைஞ்சிப் பெருவாழ் வுறவருளாய்!
எந்தாய், சந்நிதித் திறையவனே!!

சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக்குருக்கள்

அகந்தையை விட்டுவிடுபவனுக்கு கருணை வந்துவிடும்.



சிவமயம்

திருக்கேதீஸ்வரம் திருவாசகம்

ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகள்

# 13-வது ஆண்டுக் குருபூசை

திருவருளை முன்னிட்டு நிகழும் விக்கிரம வருஷ தைத்திங்கள் 19-ம் நாள்

**01 - 02 - 2001 வியாழக்கிழமை**

**மாலை 5 - மணி தொடக்கம்**

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில்

திருவாசகப் பேருற்று

# ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகள்

திருவடி வழிபாடு சிறப்பாக நடைபெறும்

தலைமை :

**திருப்பணித்தவமணி சி. தியாகராசா S. T. R. அவர்கள்**

பிரதம விருந்தினர் :

**திரு. S. தில்லைநடராஜா அவர்கள்**

( மேலதிக செயலாளர், கல்வி உயர்கல்வி அமைச்சு )

சிறப்பு விருந்தினர் :

**திருமதி சாந்தி நாவுக்கரசன்**

( பணிப்பாளர், இந்து சமய கலாச்சார அலுவலகள் திணைக்களம் )

## நிகழ்ச்சிகள்

மாலை

5 - 00 தீபாராதனை - திருமுறை

5 - 10 திருவாசகம் பாராயணம் அடியார்கள்

5 - 45 சுவாமியின் திருப்பாடல்

5 - 55 கூட்டுப்பிரார்த்தனை

6 - 10 — தலைமை உரை

நல்லெண்ணம் நற்செய்கையை உருவாக்கும்.

6 - 15 ஆண்டு 2001-க்குரிய தினக்குறிப்பு ( Diary ) அன்பளிப்பு
லஷ்மி பிறின்ரஸ், 195, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு 13

6 - 20 பிரதம விருந்தினர் உரை

6 - 30 சிறப்பு விருந்தினர் உரை

6 - 40 சிறப்புரை சுவாமிகள் பற்றி திரு. வே. சதாசிவம் அவர்கள்

6 - 50 சிறப்புரை சுவாமிகள் பற்றி - 'வைசநன்மணி'
ஸ்ரீவிசுவாம்பா விசாலாட்சி மாதாஜி

7 - 00 திருவைந்தெழுத்து மௌனம்

7 - 10 சிறப்பு சொற்பொழிவு - கம்பன் கழகம்
திரு. இ. ஜெயராஜ் அவர்கள்

7 - 35 போற்றித்திருவகவல்

7 - 45 தீபாராதனை - மங்களம் அடியார்களுக்கு அமுது

அனைவரும் இவ்வழிபாட்டில் பங்குபற்றி இன்னருள் பெற்றேகுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சி. தியாகராஜா ( S. T. R. ) — தலைவர்

த. துரைராசா — (074-200081) செயலாளர்

ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபை

---

## ஞானச்சுடரே வாழ்க ! நின் புகழ் வளர்க !!

அற்புதங்கள் பலவற்றைத் தந்து
ஆலமரமாய் கிளை பரப்பி
இனிய உள்ளமதைச் சிதைக்கும்
ஈவிரக்கமற்ற யுத்தத்தினால்
உணர்விழந்து நிற்கும் எமக்கு
ஊக்கம்தனைத் தரும் மருந்தாக
எல்லோர்க்கும் இறைபக்திதனை
ஏற்றிடும் இன்னமுதாக
ஐயம் திரிந்து வாழ்வதற்கு
ஒளியேற்றிடும் தீபமே
ஓதிடுவோம் உன் புகழை
ஔடதமாக உள்ளத்திற்கு அமையும்
ஞானச்சுடரே வாழ்க - நின்
புகழ் வளர்க

— இ. தீபா

திருப்தியே விடுதலைக்கு வழி வகுக்கின்றது.

உ



## யாழ் / தொண்டைமானாறு
## ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன்

# திருத்தல புராணம்

சீ. விநாசித்தம்பிப்புலவர் அவர்கள்

தொடர்ச்சி........

தொண்டைம னாற்றுப் பேரிற் றுலங்குமிப் பதியின் கண்ணே
பண்டையிற் கோயில் கொண்ட பார்வதி பாலன் என்னும்
தண்டமிழ் தந்த செல்வச் சந்நிதிக் கந்தன் கோயில்
கண்டவர் கவலை நீக்கிக் கருணையின் காந்தம் வீசும். 14

நீலமா கடலி னோடும் நெடுந்தொண்டை யாற்றி னோரம்
கோலமா மடங்க ணீண்ட கோபுரம் குளிர்ந்த வீதி
மூலமா தீர்த்த மன்ன மூட்டிடு முதலி டங்கள்
சீலமா செழிப்புக் காட்டும் செல்வனின் சிறந்த கோயில். 15

ஆவணம் நிறைந்த வீதி அறந்திகழ் அன்பர் வீதி
பூவணி யடியார் வீதி பூசனைத் தவத்தர் வீதி
பாவலர் பயிலும் வீதி பத்தினிப் பெண்டிர் வீதி
தேவரின் வீதி யாவும் திருப்பொலிந் திலங்கு மன்னோ. 16

மன்னிய முழவ மெங்கும் வழங்குபல் லியங்கள் எங்கும்
முன்னிய தீப மெங்கும் முரனறும் தூப மெங்கும்
இன்னிசைப் பாடலெங்கும் எழுங்கலை யாடல் எங்கும்
சந்நிதி எங்கும் சங்கு தருமொலி பொலியு மாதோ. 17

## தேவர் பூசனைப் படலம்

அந்தமி லவுணர் தங்கள் அடல்கெட உதித்த செவ்வேள்
செந்திலம் பதியி னின்று தென்பதி ஏம கூடம்
வந்திடும் போதில் வீர வாகொடு துணைவர் வானோர்
சந்திகண் டித்த லத்தே சரவணற் பூசை தந்தார். 18

வேலவா போற்றி ஞான விமலனே போற்றி இன்பக்
கோலமா மயிலி லேறும் குமரனே குகனே போற்றி
மூலமே போற்றி நீல முகுந்தனின் மருகா போற்றி
பாலனாய் வந்து தித்த பரமனே போற்றி போற்றி 19


[ தொடரும்... —

தீய ஆசைகளுக்கு அடிமைகளாகாதீர்கள்.

உ

# சந்நிதியான்

✕ ந. அரியரத்தினம் ✕



பாரதயுத்தம் முடிந்து பஞ்ச பாண்டவர்கள் நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள், அரியாசனத்தில் பீமன் இருக்கிறான், வழக்கு ஒன்று சபைக்கு வருகின்றது. ஒருவர் தனது காணியை வேறொரு நபருக்கு விற்றுவிட்டார். காணியை வாங்கியவர்கள் வாங்கிய காணிக்குள் புதையல் ஒன்றைக் கண்டு எடுக்கின்றார். எடுத்தவர் சிந்திக்கின்றார் இது எனக்குச் சொந்தமாக வரமுடியாது நான் காணியைத் தான் வாங்கினேன். இந்தப்புதையல் காணியை விற்றவருக்கே உரித்தானது என முடிபு செய்து அவரிடம் கொண்டு சென்று அதை ஏற்றுக்கொள்ளுமாறு கூறுகின்றார். அதற்கு அவர் நான் எப்பொழுது காணியை விற்றேனோ அன்றிலிருந்து அந்தக்

பயம்தான் மிகப்பெரிய பாவம்.

காணி தொடர்பான அனைத்தும் உனக்கே உரிமையானது ஆகவே அந்தப் புதையல் உனக்குரியதே'' என்று கூறி வாங்க மறுத்துவிட்டார். இந்த வழக்கே பஞ்சபாண்டவர் அரண்மனைக்கு சென்றது. அரியாசனத்தில் இருந்த வீமன் வழக்கை வேறு ஒரு தினத்திற்கு பிற்போடுகின்றான்.

அன்று தர்மர் அரியாசனத்தில் இருக்கின்றார். அதே வழக்குச் சபையில் எடுக்கப்படுகிறது. இப்பொழுது வழக்கின் கருப்பொருள் மாற்றமடைந்துவிட்டது. புதையலை எடுத்தவன் அது தனக்கே சேரவேண்டும் ஆகவே அது தனக்கே உரியது என்று தீர்ப்பளிக்குமாறு கூறுகின்றான். காணியை விற்றவனோ இல்லை தான் காணியை மட்டும் தான் விற்றேன் புதையலை அல்ல ஆகவே உண்மையில் புதையல் தனக்கே உரியது என்றும் தனக்கு அது கிடைப்பதற்குத் தீர்ப்பு வழங்குமாறு கேட்கின்றான். சபையில் உள்ளவர்கள் விழிக்கின்றார்கள் வழக்கின் கருப்பொருள் தலைகீழாக மாறியிருப்பதற்குக் காரணம் உண்டா என ஆராய்ந்த சகாதேவன் காரணத்தைக் கண்டுபிடித்து அதைச் சபையில் வெளியிடுகின்றான். ஆம்! கலியுகம் பிறந்துவிட்டது அதுதான் இந்த மாற்றம்.

கலியுகம் பிறந்துவிட்டது என்பதற்கும் கலியுகம் எப்படியிருக்கும் என்பதற்கும் கூறப்படுகின்ற பல கதைகளில் மேற்கூறிய கதையும் ஒன்று. கலியுகத்தின் அம்சங்களை நாம் இன்று நிச வாழ்க்கையிற் காணுகின்றோம். அதர்மம், நம்பிக்கைத்துரோகம், செய்ந்நன்றிமறத்தல், அதிகாரத் துஷ்பிரயோகம், கலப்படம்...... இவைகள் இன்று மக்கள் மத்தியில் மலிந்து காணப்படுகின்றன. மாறாகத் தர்ம காரியங்கள் தர்மமான செயற்பாடுகள் அருகிக்கொண்டே செல்வதாகப் பலரும் அங்கலாய்க்கின்றனர். அதுமட்டுமன்றித் தர்மமான காரியங்களைச்செய்பவர்கள்கூட அதில் முழுமையான நம்பிக்கை கொள்வதில் தயக்கம் காட்டுவது போலத் தெரிகின்றது. இந்தக் கலியுகத்தில் தர்மம் வெல்லுமா என்று பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

இவற்றிற்கெல்லாம் பதிலளிக்கும் வகையிற் கலியுகக்கந்தனாம் சந்நிதியானின் திருவருளால் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் சில செயற்பாடுகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமானது.

1987 ஆம் ஆண்டு வடமராட்சியில் இடம்பெற்ற வன்செயல்களைத் தொடர்ந்து சந்நிதி ஆலயம் புனரமைக்கப்பட்டது போன்று ஆச்சிரமமும் புனரமைக்கப்படவேண்டிய தேவை ஏற்பட்டது. ஏனென்றால் ஆலயத்தில் வழிபாடு ஆரம்பித்தால் வழிபட வருகின்ற அடியார்க

ளின் பசியைப் போக்கவேண்டிய பணியை ஆச்சிரமம் செய்ய வேண்டியது அவசியமானதாகும். ஆனால் இதை மேற்கொள்வதற்கானகட்டடவசதிகளோ அன்னதானத்தை மேற்கொள்வதற்கான நிதி வசதிகளோ எதுவுமே அப்பொழுது இருக்கவில்லை. இதனால் ஆச்சிரமத்தின் சுவாமிகள் அர்ப்பணிப்பாகத் தன்னுடன் இணைந்து செயற்படக்கூடிய ஒரு சில அன்பர்களின் உதவியினாற் பல பிரச்சினைகள் மத்தியில் இடம் ஒன்றை வாடகைக்குப்பெற்றுகட்டடங்களை சிறிய அளவிற் புனரமைப்புச் செய்து அன்னதானப் பணிக்குரிய நிதியை தொண்டுள்ளம் நிறைந்த அன்பர்களிடம் நாடிச்சென்று, அதனை கேட்டுப்பெற்றே அன்னதானப் பணியை ஆரம்பித்தார்கள்.

இக்காலகட்டத்தில் ஆச்சிரமத்தின் சுவாமிகள் மிகவும் கஷ்டப்பட்டே இந்தப் பணிகளை ஆரம்பிக்க முடிந்தது. அத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவிற் சிறிய அளவிலேதான் அன்னதானப் பணிகளை மேற்கொள்ளவும் முடிந்தது.

ஆனால் மயில்வாகனசுவாமிகளின் குருவருள் நிச்சயமாகத் தனது பணிகளுக்குத்துணைசெய்யும் என்ற அசையாத நம்பிக்கை அவருள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. அவரது நம்பிக்கை வீண்போகவில்லை காலப் போக்கிற் பல அன்பர்கள் தாமாக நாடிவந்து பல உதவிகளைச்செய்யத் தொடங்கினர். அதுமட்டுமன்றி முருகேசு சுவாமிகளும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகளுக்குத் தனது பங்களிப்புக்களை வழங்க முன்வந்தார்கள். இவ்வாறு சந்நிதியான் ஆச்சிரமம் படிப்படியாகத் தனது தொண்டினை விஸ்தரிக்க ஆரம்பித்தது.

ஆச்சிரமத்தினுடைய பணிகள் விரிவடைந்து செல்லுகின்ற காலகட்டத்தில் ஆச்சிரமத்தின் ஓர் அங்கமாகச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையும் ஸ்தாபிக்கப்பட்டது ஆனாலும் பேரவையினுடைய பணிகளுக்கும் ஆணிவேராக ஆச்சிரமம்தான் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்று ஆச்சிரமத்தினுடைய பணிகளும் பேரவையினுடைய பணிகளும் காலத்தின் தேவைக்கு ஏற்ப விஸ்தரிக்கப்பட்டுள்ளன. ஆச்சிரமம், ஆலயமே தஞ்சமென வாழ்ந்து வருகின்ற ஒருதொகை அன்பர்களுக்குத் தினமும் உணவு மற்றும் தேநீர் வழங்குவது உட்படத் தனது அன்னதானப்பணியைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது.

அத்துடன் மயில்வாகன சுவாமிகளின் குருபூசை விழா, கல்வி நிறுவனங்கள் சிலவற்றின் ஆரம்பக்கல்விக்கான நிதிஉதவி,

நன்றாக எழுதுவதைப்போன்றதே நேர்மை.

கஷ்டப்பட்ட பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திக்கான ஊக்குவிப்புச்செயற்பாடு. ஆலயமும் ஆச்சிரமமும் அமைந்துள்ள கிராமத்துப் பாடசாலையின் வருடாந்தத் திருக்குறட் போட்டிக்கும் திருவள்ளுவர் விழாவிற்குமான பங்களிப்பு இவ்வாறுசமூகத்தொண்டாக செய்ய வேண்டிய தேவைகள் ஏற்படும் பொழுது அவற்றை எல்லாம் ஆச்சிரமம் தான் ஆற்றவேண்டியசேவைகளாகவே நினைத்துச் செயற்படுத்திவருகின்றது.

இதே போன்று பேரவை வாராந்த வெள்ளி நிகழ்வு, ஞானச்சுடர்சஞ்சிகை வெளியீடு, வருடாந்த வைகாசிவிழா, கந்த சஷ்டிக்கால விசேட நிகழ்வுகள் உற்சவகால விசேட நிகழ்வுகள், திருவாசக விழா, பெரியோர்களுக்கு விருது வழங்கல், மாணவர்கள் மத்தியிற் போட்டிகள் நடாத்துதல் — போன்ற செயற்பாடுகளையெல்லாம் காலத்தின் தேவையாகக் கருதி மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினாலோ. சைவ கலை பண்பாட்டுப் பேரவையினாலோ மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பல்வேறு பணிகளுக்குமான நிதிப்பலமோ, நிர்வாக உத்தியோகத்தர்களோ, ஆலோசனைச்சபையோ இங்கே இல்லை இவைகள் செய்யவேண்டிய பணிகள், இவைகள் தர்மமான காரியங்கள் என்றவகையில் இவற்றை எல்லாம் செய்துகொண்டிருக்கின்றோம். இவற்றை எப்படிச் செய்கின்றோம்? இவை அனைத்தையும் தொடர்ந்து செய்ய முடியுமா என்பதைப்பற்றி நாம் பெரிதாகச் சிந்திப்பதில்லை ஆனால் இவைகள் அனைத்தும் சிறப்பாகவே நடைபெறுவதாக நாம் கருதுகின்றோம்.

இவற்றிற்கெல்லாம் யார் காரணம் யாருடைய பின்னணிப் பலம் உள்ளது. எவ்வாறு நடக்கின்றதென்பதெல்லாம் வெளியில் உள்ள அன்பர்களுக்கும் தெரியாது. எங்களுக்கும் தெரியாது ஆச்சிரமத்தின் சுவாமிகளுக்கும் தெரியாது. ஒன்றுமட்டும்தான் தெரிகின்றது. ஆம் அது சந்நிதியானின் திருவருள். சந்நிதியான்தான் தோன்றாத் துணையாக இருந்து இந்தத்தர்மமான காரியங்களை வழிநடாத்திச் செல்லுகின்றான்.

தர்மம் தழைக்கவேண்டும், நல்லது நடக்கவேண்டும், உண்மை வெல்லவேண்டும், தொண்டு தொடரவேண்டும் — இவை எல்லாம் கலியுகமாம் இன்றைய காலகட்டத்திற்குப் பொருந்துமா இவை நடக்குமா? இவை சாத்தியமா என்று பலர் அங்கலாய்ப்பதை நாம் காண்கின்றோம். ஆனாலும் இவ்விதமான தர்மகாரியங்கள் சாத்தியமாகும் என்பதையே நாம் எமது அநுபவபூர்வமாக அறிந்து

நீ இழந்தது முக்கியமல்ல; எஞ்சியிருப்பதுதான் முக்கியம்.

செயற்பட்டுக் கொண்டிருக்கின் றோம்.

இவை சாத்தியமாவதற்கு இறையருள் கைகூட வேண்டும். அத்துடன் நாம் தர்ம நெறி தவ றாது நடக்க வேண்டும் இவை இரண்டும் சாத்தியமானால் அனைத்தும் சாத்தியமே.

ஆகவே ஆச்சிரமமும், பேர வையும் ஏதாவது தொண்டுகள் செய்கின்றதென்றால் அது சந் நிதியானின் திருவருள் ஒன்றே தவிர வேறு ஒன்றுமில்லை. இங்கே செயற்படுபவர்கள் கருவி களே தவிர காரணமாக நிற்ப வன் சந்நிதியானே.

தர்மம் தழைப்பதாக!

ஓம் முருகா.

---

## அடைக்கலம் தா ஆறுமுகா!

ஆற்றங்கரை தன்னில் அமர் - அண்ணலே உனை
அடிபணிந்து தொழுகின்றோம் அல்லல் தீர்ப்பாய்
அன்னதானம் நித்தம் உந்தன் சந்நிதியிலே
அளிப்பவனே அடைக்கலம் தா அகதிகளுக்கு,
உண்ண இன்றி, உடுக்க இன்றி நாம்படும்பாடு
உந்தனுக்குத்தெரியலையோ தொண்டைமானாற்றா;
உற்ற இடம் தனை இழந்து அகதிகளாக,
ஊமைகளாய் நாம் இருக்கும் நிலையதுமாற,
உன் துணையை வேண்டுகின்றோம் சிறுவர்கள் நாமே
தேர் எரிந்த கதையுனக்கு ஞாபகமன்றோ,
தேடிவரும் பக்தர் நிலை பாராய் பாலா,
பாடித்திரி பிஞ்சுகள் நாம் பட்டினியாய்ப்
பட்ட இடர் தீர்க்க வாராய் பரமனின் மைந்தா
சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்று பணிகளை,
நித்தமும் பார்த்திருப்பாய் ஏறுமயிலவா,
அண்டியோரை அரவணைக்கும் பன்னிருகைகள்
உண்டி தந்து காத்தெமக்கு உறுதுணையாக
அடைக்கலமே நீதருவாய் ஆறுதல் பெறவே,
அடைக்கலமே நீதருவாய் ஆறுதல் பெறவே.

பாமதி சுந்தரலிங்கம்

---

எல்லாம் அறிந்தவனும், ஏதும் அறியாதவனும் இல்லை.

# மாசி மாத வாராந்த நிகழ்வுகள்

02 - 02 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 – 30 மணியளவில்

அறிமுகவுரை :- சிவஸ்ரீ திரு. இ. குமாரசாமிக்குருக்கள்
( பிரதமகுரு வரணி சிட்டிவேரகம் கண்ணகை அம்பாள் ஆலயம் )

சொற்பொழிவு - 'தெய்வத்துணை'

வழங்குபவர் :- வரணியூர் சைவப்புலவர்
திரு. சி. கா. கமலநாதன் B. A. ( Hons )
(முகாமைத்துவ உதவியாளர், புற்றளை வித்தியாலயம் புலோலி)

---

09 - 02 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 – 30 மணியளவில்

அறிமுகவுரை :- திரு. சி. செ. சோமசுந்தரம்
( இளைப்பாறிய, வங்கி முகாமையாளர் )

சொற்பொழிவு - 'சிறுத்தொண்டன் எனும் பெருந் தொண்டன்'

வழங்குபவர் :- சிவானந்தவாரிதி
சிவத்திரு. வ. குமாரசாமி ஐயர்
( வலி, வட பிரதேசசபை காங்கேசந்துறை )

---

16 - 02 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- திரு. பொ. அருந்தவநாதன்
( விரிவுரையாளர் யாழ். கல்லூரி வட்டுக்கோட்டை )

சொற்பொழிவு - 'திருமந்திரம்' ( தொடர் )

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல்
( விரிவுரையாளர் யாழ் கல்லூரி, வட்டுக்கோட்டை )

---

23 - 02 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு
# மாசி - 2001

வெளியீட்டுரை :- சிவஞானி திரு. சி. சக்திகிரீவன்
( கௌரவ செயலாளர், இந்துப் பேரவை )

மதிப்புரை :- சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை
( இளைப்பாறிய அதிபர் )

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் (2001 ஜனவரி - ஒக்டோபர்) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 2002 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்க் குழு :
**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.**
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.